செந்தமிழ்

தொகுதி 77 டிசம்பர் '83 பகுதி

—உள்ளே—

குழந்தை நலம் —167

ஊர்வசி —172

பிரேம்சந்த் —178

சீறாப்புராணம் —197

ஆற்றலும் ஆக்கமும்—205

தமிழ்ச்சங்கம்
ADURA TAMIL SANGAM

ஆசிரியர் : டி.பி.எம். பெரியசுவாமி

செந்தமிழ்

தொகுதி 77 டிசம்பர் 1983 பகுதி-4

உள்ளுரை

எண்	பொருள்	பக்கம்
1.	இனிய வேண்டுகோள்	
2.	குழந்தை நலம் —அசாமி	... 167
3.	ஊர்வசி ப. முத்துச்சாமி எம்.ஏ.எம்.எட்.	... 172
4.	வர்மமும், நோய்களும் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை	... 173
5.	பிரேம்சந்த் — இருமொழி நாவலாசிரியர் — பழனி அரங்கசாமி	... 178
6.	தேவர் திருமகன்	... 188
7.	அந்நாள் வருமோ அம்மா? — சி. சுப்புராயன்	... 190
8.	திரண்ட பொருள்	... 191
9.	பொது அறிவு — வினா-விடை — திரையன் பி.எஸ்.சி.	... 193
10.	சீறாப்புராணமும் கீர்த்தனையும்—ஒப்பியலாய்வு — எஸ்.எம்.ஏ. காதர், பி.ஏ பி.எட்.	... 197
11.	ஆற்றலும் ஆக்கமும் C. E சூரியமூர்த்தி	— 205

இனிய வேண்டுகோள்

ஆண்டுதோறும் வந்துபோகிற அருந்தமிழ்ப் பெரும் பொங்கல் இந்த ஆண்டும் வந்துள்ளது. தமிழகத்து நாளேடுகள், வார, மாத இதழ்கள் சம்பிரதாயமான வாழ்த்துகளுடன் பொங்கல் மலர்களை வெளியிட்டுள்ளன. முத்திங்கள் ஏடாகிய 'செந்தமிழ்' ஓரிரு வாரங்கள் கடந்து வெளியிடப்பட்டாலும், நற்றமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு பொங்கல் திருநாள் தொட்டு பூத்துக் குலுங்க வேண்டும் என்று வாயார வாழ்த்திப் போற்றுகிறது. தமிழ்ச்சங்கம் பத்திரிகை நடத்தும் பணியை தொழிலாகக் கருதாமல் தொண்டாகவே கருதி வருகிறது காலந்தொறும் வெளியாகித் தன்னால் இயன்ற தமிழ்த் தொண்டை இப்படித் தளராது செய்துவரும் 'செந்தமிழ்' தன்னைப் பற்றியும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கிறது.

எண்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தனக்கென்று வகுத்துக் கொண்ட இலக்கிய இலக்கணப் பாட்டையில் 'செந்தமிழ்' நடைபயின்று வருகிறது. இந்நாட்களில் பாலுணர்ச்சியும், பாவையரின் கவர்ச்சியும் வைத்துப் பத்திரிகை நடத்துவோர் மலிந்து வருகின்றனர். மகளிர் நல உரிமைச் சங்கங்கள் 'பெண்களை முன்வைத்துப் பிழைப்பு நடத்தாதே' என்று ஒருபுறம் கூக்குரல் இடுகின்றனர். இந்த மஞ்சள் பத்திரிகைகள் வளர்ந்து வருகின்றன என்றால் எஞ்சி நிற்கின்ற தமிழகம் இருண்ட காலத்திற்குப் போகிறது என்று பொருள். இத்தகு சூழலில் சிக்காமல் தரம் கெடாமல் விளம்பரம் இல்லாமல் இலாப நோக்கமின்றி இப்படித்தான் பத்திரிகை நடத்த வேண்டும் என்ற நியதியின்கீழ் 'செந்தமிழ்' வெளியாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் மொழி, கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு பற்றி போட்டிபோட்டுக் கொண்டு பேசப்படும் இந்நாட்களில் செந்தமிழின் வாசகர்களும் அதிகரிக்க வேண்டாமா? அடக்க விலையில் வெளியாகின்ற இந்த இதழினைப் பார்ப்போர், படிப்போர் தாங்கள் மட்டுமேயன்றிப் பிறரையும் செந்தமிழின்பால் வயப்படுத்த வேண்டும். வெளியாகின்ற இதழ்களில் குணம் காணின், பாராட்டக் கூட வேண்டாம். குறை கண்டால், கடிந்து எழுதுங்கள். இப்படி அமையவேண்டும் என்று அறிவுரை தாருங்கள்.

இந்த இதழ் பற்றி ஓரிரு வார்த்தைகள்.

பெருகி வருகின்ற மக்கட் தொகைக்குத் தேவையான உணவும், உடையும், உறையுளும் கொடுத்தாக வேண்டிய இடர்ப்பாட்டில்

இன்றைய உலகம் சிக்கித்தவிக்கிறது. தொழில் வளத்தினால் பிழைத்துக் கொள்ளலாம் என்றால், பெட்ரோலியம் குறைந்து வருகிறது. அராபிய எண்ணெய்க் கிணறுகள் வற்றிக்கொண்டு வருகின்றன. எரிபொருள் சக்திக்கு ஏங்கி நிற்கின்ற உலகம் அலைகடலுக்கும் கீழே ஆராய்ந்து கொண்டுள்ளது. வெப்பநாடுகளில் சூரிய ஒளியினைப் பயன்படுத்தும் திட்டங்கள் துவக்க நிலையில் உள்ளன.

சுட்டெரிக்கின்ற வெய்யிலைக் கட்டுக்குள் அடக்கி மின்னொளியாக மாற்றும் மேன்மைக் கலை இன்று ஆரம்ப கட்டத்தில் உள்ளது. அண்மை நாடான பாகிஸ்தானில் இருபது கிலோவாட் கொண்ட சூரியசக்தி நிலையம் (Solar Power Station) அறுபது லட்ச ரூபாய் செலவில் சியால் கோட்டுக்கு அருகில் உருவாகியுள்ளது. நானூறு வீடுகளுக்குத் தொடர்ந்து மின்சக்தி வழங்கும்; மழை காலங்களில்கூட இந்தச் சக்தியை பத்து நாட்களுக்குச் சேமித்து வைக்க முடியும் என்று பாகிஸ்தான் டைம்ஸ் (Jan. 15, 1984) கூறுகிறது. இது பற்றிய சிந்தனையைத் தூண்டும் டாக்டர் சூரிய மூர்த்தியின் கட்டுரையோடு, திரையன் எழுதும் எளிய அறிவியல் வினா விடையும் வெளியாகியுள்ளன. பிரேம்சந்த் எனும் இருமொழி நாவலாசிரியர் பற்றிய வரலாற்றுக் கட்டுரையோடு, கவிதைகளும் நூல் மதிப்புரையும் இடம் பெற்றுள்ளன. உங்கள் வாழ்த்தும், பாராட்டுகளும் செந்தமிழ் இதழுக்கு வலிவும், பொலிவும் தரும் என்பது எமது நம்பிக்கை.

—பொறுப்பாசிரியர்

குழந்தை நலம்

—அசாமி.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில் என்பது பழமொழி. குழந்தைகளைப் பெற்று பேணி வளர்த்து அவர்களின் நலமான வாழ்வுக்கும் வழிவகுத்து வருகிறோமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு மணித்துளிக்கு ஒன்றரைக் குழந்தை வீதம் உலக முழுதும் குழந்தைகள் பெறப்படுகின்றன என்பது ஒரு மதிப்பீடு. உண்மையில் ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்வும் உயர்வும் அக்குடும்பத்தைச்சார்ந்த குழந்தைகளின் வளர்ச்சியில் அடங்கியுள்ளது. குழந்தைகள் உயர்வே குடும்ப உயர்வு. குடும்பம் உயர்ந்தால், சமூகம் உயரும். சமூக வளர்ச்சியில் நாட்டின் உயர்ச்சி அடங்கியுள்ளது. எனவே தான் அகில உலகக் குழந்தைகள் நலனுக்கென்றே ஐக்கிய நாட்டு சபை ஒரு பிரிவினை (UNICEF) இயக்கி வருகிறது. இது பற்றியே இந்த ஆண்டில் அகில உலகக் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. குழந்தைகளுக்கு நோய்கள் வராமல் தடுப்பதற்கும், நோய்கள் வந்தால் குழந்தைகளை அவற்றினின்று காப்பதற்கும் உலகக்குழந்தைகள் நிறுவனம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு வருகிறது.

குழந்தைகளுக்கு அடிப்படையான தேவைகள் யாவை?

(i) போதிய உணவும், தூய குடி நீரும்

(ii) இருக்க இடமும் உடுக்க உடையும்

(iii) பயில்வதற்குப் பள்ளியும், படிப்பதற்குப் புத்தகங்களும்

(iv) ஓடியாடி விளையாடப் போதிய இடவசதி

(v) கண்காணிப்பும் மருத்துவ வசதியும்

இவை அனைத்துள்ளும், தேவையானபோது காலத்தால் செய்ய வேண்டிய மருத்துவ உதவியே இன்றியமையாதது. மிகவும் எளிதான மருத்துவ உதவியைக்கூட கொடுக்கும் வழி தெரியாமல் வகை இழந்து பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் தமது குழந்தைகளை இழந்து விடுகின்றனர். ஒரு சான்று காண்போம்.

மாலை மூன்று மணி இருக்கலாம். நீலநிறவானம் இருண்டு கிடந்தது. சூல் கொண்ட கருமேகங்கள் சுற்றி அலைந்து கொண்டிருந்தன. பனித்துளியாக விசிறத் தொடங்கிய வானம் பெருமழையாகக் கொட்டத் தொடங்கியது. அது ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு வீட்டில் ஒரு குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை. காலையிலிருந்து இரண்டு, மூன்று வேளை மலம் கழித்த இரண்டு வயதுக் குழந்தையின் வயிற்றுப்போக்கு நேரம் ஆக ஆக அதிகரித்துக் கொண்டிருந்தது. மழை பெய்து கொண்டிருக்கும் முன்னிருட்டு வேளையில் நகரத்துக்குச் செல்லும் பெருஞ்சாலையினை அடைவதற்கே அரைமணி நேரமாகும். பின்னர் பேருந்தைப் பிடித்து குழந்தை மருத்துவரைக்காண வேண்டும். இதற்கிடையில் குழந்தையின் வயிற்றுப் போக்கு நீர்ப் போக்காக மாறி விட்டது. வாந்தியும் நிற்கவில்லை. குழந்தையின் கண்கள் செருகி விட்டன. அலறித் துடிக்கிறாள் தாய். பக்கத்து வீட்டுக்காரரை உதவி கேட்டு மாட்டு வண்டியைப் பூட்டினார்கள். வண்டி ஊர் எல்லையைத் தாண்டுவதற்குள் அந்த இரண்டு வயதுக் குழந்தை உலக எல்லையைத் தாண்டி விட்டது. மிகக் குறைந்த அளவேயாயினும், அந்தச்சிறு உடலுக்குத் தேவையான நீரும், திரவமும் வாந்தியிலும் வயிற்றுப் போக்கிலும் (Diarrhoea) கழிந்து விட்டது வயிற்றுப்போக்கு உச்சகட்டத்துக்கு வரும்போது சிறுநீர் பிரிவதும் நின்றுவிடும். கடுமையான தாக உணர்ச்சி ஏற்படும். வாய் உலர்ந்து விடும். எச்சில் ஊறாது. தோலில் உள்ள தொய்வுத்தன்மை போய்விடும். இத்தகைய உடல்துன்பத்தை வாய் விட்டுச் சொல்வதற்குச் சிறு குழந்தையால் எப்படி இயலும்?

ஆண்டு தோறும் உலகம் முழுதும் ஏறத்தாழ ஐம்பது லட்சம் குழந்தைகள் வாந்தி பேதியினால் இறந்து விடுகின்றன. முன்பெல்லாம் இந்த நோய்க்கு மருத்துவம் பார்க்கும் போது நரம்புகளின் வழியாக (intravenous) உப்புக்கலந்த குளுகோஸ் நீரை உடலில் ஏற்றுவார்கள். ஆனால் இந்தப் பணியினை பயிற்சி பெற்ற மருத்துவர் தான் செய்யமுடியும். இப்போது அப்படியில்லை. எந்த மருத்துவரையும் தேடி ஒடவேண்டியதில்லை. பேதியின் அறிகுறி காணப்பட்ட உடனேயே நீர் வெளியேற்றத்தைத் (Dehydration) தடுத்து விடலாம். மருத்துவரிடம் போவதற்கு முன்னர் இது ஒரு தலைசிறந்த தற்காப்பு நடவடிக்கையாகும். குழந்தைக்குத் தேவையான தெம்பும், நோயினை எதிர்க்கும் சக்தியும் கொடுப்பதற்கு

வீட்டிலேயே கீழ்க்காணும் முறைப்படி சிறிய அளவில் மருந்துநீர் தயாரித்து விடலாம்.

4 டம்ளர் தண்ணீர் (கொதித்துக் குளிர்ந்தது)

2 தேக்கரண்டி ஜீனி

2 சிட்டிகை உப்பு

4 சொட்டு எலுமிச்சைச்சாறு

இந்தக் கலவையை கால்மணி அல்லது அரைமணி நேர இடைவெளியில் சிறிது சிறிதாகக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு இதனைப் புகட்டுவதும் எளிது. இங்கிலாந்தில் வெளியாகும் 'லான் செட்' எனும் மருத்துவப் பத்திரிகையே சில மாதங்களுக்கு முன்னர் இம்முறையினை பிரபலப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் சார்பான உலக குழந்தை நிறுவனமும் - யுனிசெப் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

சிறுகுழந்தைகளைக் காலப்போக்கில் நலிவுபடுத்தி வளர்ச்சியைக் குறைத்து வெறும் நடைப்பிணமாகவே வைத்திருக்கும் மற்றொரு நோய் ஊட்டச்சத்துக் குறைவு (Malnutrition) ஆகும். எந்த ஒரு பிணியினைப்போன்று மறைந்திருந்தே கொல்லும் இதுவும் ஒரு நோய். அரைப்பட்டினியாகக் கிடக்கும் குழந்தையைத்தான் இது பீடிக்கும் என்று வசதி படைத்த நாடுகளில் எண்ணுகிறார்கள். உண்மை அதுவல்ல. குழந்தையின் சீரான வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டம் கிடைக்காமல் போனாலும், குடல்நோய்கள் ஏற்பட்டாலும், இந்நோய் வரக்கூடும். இதற்கு ஏழை பணக்காரன் என்ற வேறுபாடில்லை.

ஊட்டச்சத்துக் குறைவினால் குழந்தைகளின் வளர்ச்சி தடைபடுகிறது. நோயினை எதிர்க்கும் சக்தி இல்லாமல் போகிறது. சிற்சில சமயங்களில் மூளைவளர்ச்சியும் தடைப்பட்டுப் போகிறது. வருடக்கணக்கில் இதனைக் கவனித்து நிவர்த்தி செய்யாமல் போயின், நோயின் உச்சநிலையில் குழந்தைகள் கண்பார்வையைக் கூட இழந்து (Zerophthalmia) விடுவது உண்டு. இந்தியாவில் 400,00-க்கு மேற்பட்ட குழந்தைகள் இதனால் கண்பார்வை இழக்கின்றனர். உலர்ந்துபோன கண்களும், இரவில் மங்கிய பார்வையும் இதன் அறிகுறிகளாகும். ஏ-வைட்டமின் அடங்கிய முட்டைக்கோஸ், பப்பாளி, கீரை வகைகள் உண்பது நல்லது. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை-

களை இந்நோய் வெகு எளிதாகப் பற்றிக் கொண்டு விடுகிறது. அடிக்கடி சளி பிடித்துக் கொள்வதும், வயிற்றுப் போக்கு ஏற்படுதலும் காய்ச்சல் வருதலும் இதனுடைய அறிகுறி எனலாம். இதனைத் தொடக்கத்திலேயே தடுப்பதற்குறிய வழிவகைகள் என்ன என்று மருத்துவ வல்லுநர்கள் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதை எந்தக் காரணத்தைக் கொண்டும் நிறுத்திவிடக் கூடாது.

மிக எளிதில் தொற்றிக் கொள்ளக்கூடிய எந்த நோயினின்றும் சிறுகுழந்தைகளைத் தாய்ப்பால் காப்பாற்றி விடுகிறது. அது மிக எளிதில் செரிக்கக் கூடியது. குழந்தைக்குத் தேவையான இன்றி-யமையாத சத்துக்களை உள்ளடக்கியது. குழந்தை பிறந்து ஆறு திங்கள் வரையில் தாய்ப்பால் போதுமானது. பிறகு தாய்ப்பாலோடு, குழந்தையின் தேவைக்கேற்ப மருத்துவ ஆலோசனையோடு, காய்ச்சிய மாட்டுப்பால், முதிர்ந்த பழங்கள், தெளிந்தமோர், கீரைநீர் ஆகிய-வற்றைக் கொடுக்கலாம். இப்படியின்றி அழகு ஏதாவது இருப்பின் அதுபோய் விடுமே என்ற தவறான எண்ணத்துக்கும், போலியான பெருமைக்கும் ஆட்பட்டு உழலுகின்ற செல்வந்தர் வீட்டுப் பெண்கள் அறிந்தோ அறியாமலோ தாய்ப்பாலை நிறுத்தி புட்டிப்பால் கொடுத்து தங்களது குழந்தைகள் நலனைப் பாதிக்கச் செய்கின்றனர்.

புட்டிப்பாலைத் தயாரிப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. பால் பொடியைக் கலக்குவதற்கு கொதித்து ஆறிய நீரைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். கலக்குதற்குரிய பாத்திரங்கள் மிகவும் தூய்மையானதாக இருக்கவேண்டும். செயற்கையாகத் தயாரித்த இந்தப்பாலை குழந்தைக்குப் புகட்டும்போது ஒவ்வொரு முறையும் தியதாகத் தயாரிக்க வேண்டும். ஏற்கனவே மீதமாக உள்ள இந்த செயற்கைப்பாலை குழந்தைக்குக் கொடுக்கக் கூடாது. யாரும் இத்-துணைக் கவனமாக செயற்கைப்பாலைப் புகட்ட முடியுமா? சிறு தவறு நேர்ந்தாலும் குழந்தையின் நலனைப் பாதித்து விடும். எனவே தான் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தாய்ப்பாலைத்தான் குழந்தை-களுக்குக் கொடுக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகிறார்கள். பதினோரு ஆகிய ஆப்பிரிக்க நாடுகள் புட்டிப்பால் விளம்பரங்களை-யும், விற்பனையையும் தடை செய்துள்ளன.

குழந்தைகளை குறுகிய கால அளவில் எளிதில் பீடிக்கக்கூடிய நோய்கள் ஆறு என்று கூறலாம்—மணல்வாரி அம்மை, கக்குவான்,

இசிவு, டிப்தீரியா, காசம், வாதநோய். வளர்ந்து வரும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் ஆண்டுதோறும் ஒரு கோடிக்கு மேற்பட்ட குழந்தைகள் இந்நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர். இந்த ஆறு நோய்களினின்றும் குழந்தைகளைக்காப்பதற்கு ஒரே வழிதான் உண்டு. குறிப்பிட்ட ஒரு மாத காலத்திற்குள் இரண்டு மூன்று தடவைகளுக்குள் வெவ்வேறு வகையான தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளவேண்டும். அனைத்திற்கும் ஆகின்ற செலவு ஏறத்தாழ ஐம்பது ரூபாய் ஆகும். இந்தப்பணியினை உலக முழுதும் செயற்படுத்தி விடவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் உறுதி கொண்டுள்ளது. ஆயினும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வது அரசின் செயற்பாடு, மருத்துவரின் உதவி, பெற்றோரின் ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பொறுத்தது. இவற்றில் பெற்றோரின் ஒத்துழைப்பே மிகவும் இன்றியமையாதது பற்பல நாடுகளில் ஒரிரு முறை தடுப்பு ஊசிபோட்டுக் கொண்டதோடு விட்டு விடுகிறார்கள். மருத்துவ ஆலோசனையின் படி குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அனைத்துத் தடுப்பு ஊசிகளையும் போட்டு வருமுன் காத்துக் கொள்வோராக இருக்கவேண்டும்.

குழந்தை நலனைக் கண்காணித்து வருவதற்கு ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. ஒவ்வொரு மாதந்தோறும் குழந்தையின் எடை, அதற்கு ஏதேனும் உடல்நிலைக் கோளாறு ஏற்பட்டால் அந்த நாள், பிணியோடு இருந்த நாட்கள், கொடுத்த மருந்து ஆகிய விவரங்களை ஒரு அட்டையில் குறித்துக்கொண்டு வரவேண்டும். கல்வி பயின்று சோம்பலின்றி ஒழுங்கும் நியதியும் கைவரப் பெற்ற தாய்மார்களே இதனைச் செய்யமுடியும். நோயுற்றிருக்கும் குழந்தையை மருத்துவரிடம் எடுத்துச் செல்லும்போது தொடர்ந்து பிணிநீக்கம் செய்வதற்கும், மருந்து கொடுப்பதற்கும் இந்தக் குறிப்புகள் உதவியாக இருக்கும்.

நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.

—திருவள்ளுவர்.

ஊர்வசி

ப. முத்துசாமி எம்.ஏ, எம்.எட்
தாராபுரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஒழிவறியா அதிசயமே ஊர்வசியே கண்ணே
யுகமனைத்தும் உலகனைத்தும் போற்றலுறும் தேவீ
விழியொசிந்த நின்பார்வை நோக்கிலிந்த வையம்
விம்மியிளம் வேதனையில் வெய்துயிர்க்கும் கண்டாய்!
பழியறியாத் துறவிநின்றன் இணையடியில் கொணர்ந்தே
பசித்திருந்த நோன்புகளின் பலனையெல்லாம் வைப்பான்
மொழிபடைத்த கவிஞர்களின் பாடலெல்லாம் கூடி
மொய்ம்புறு நின் மனம்நுகர்ந்து மொய்த்தன நின் சூழ்ந்தே
அழகியநின் காலடி சேர் அரும்பொன்னின் சலங்கை
ஆர்ப்பொலியில் காற்றிதயம் ஈர்த்துடைக்கும் அம்மா!
ககனவெளி தனிற்புதிய இசையலைகள் பாய்ச்சிக்
கடவுள்களின் முன்னிலைநீ நடனமிடும் போதில்
நகையொலியில் ஊர்வசியே நடுங்குதடி உலகம்;
நறும்புல்லும் இலையுமசைந் துணர்வுடனே விம்மும்;
தொகுகடல்கள் ஓசைநயத்தலைகளுடன் பொங்கும்
தொலைவானின் விண்மீன்கள் துணுக்கமுற்று வீழும்
தரும் நினது மார்பில் வந்து தஞ்சமுறும் நிலையில்
தரளமணிக் கோவையெல்லாம் சரசரென உதிரும்
திகுதிகெனக் கிளர்ச்சியுடன் மனிதரித யமதில்
செங்குருதி நடனமிட்டுக் கொந்தளிக்கும் கண்டாய்!
பண்ணுலவும் மொழிமடந்தாய் பயிலுகின்ற காற்றைப்
பரவசத்தில் ஆழ்த்தியதன் அமைதிகெடுத் திடுவாய்
கண்ணீரில் உலகுகின்றன் கைகாலைக் குளிக்கும்
கனிந்திதயக் குருதிவண்ணம் கால்சிவக்கச் செய்யும்
தெண்ணீரின் அலையசைவின் திகழ் ஆசைக் கமலத்
தெளிமேடை தனில்மெல்லச் சிறுநடனம் செய்வாய்!
எண்ணரிய எல்லையில்லா மனத்தகத்தில் நீதான்
எழில்மகளே ஊர்வசியே என்றும்நடம் புரிவாய்.
நண்ணுமிறை வன்கிளர்ச்சிக் கனவு வினைபுரியும்
நன்மனத்தில் விளையாடும் நளிர்மகளே வாழ்க.

(முற்றும்)

(டாக்டர்.எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை)

விஞ்ஞான வளர்ச்சி பெருகப்பெருக நாட்டில் விபத்துக்களும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகின்றன. இந்நிலை தவிர்க்க முடியாதது. இதன் விளைவால், இன்று சுமார் 50% மக்கள் பல்வேறு விபத்துக்குள்ளாகி இறக்கின்றனர். ஓடும் வாகனத்திலிருந்தோ, உயரமான இடத்திலிருந்தோ விழுதலாலும், மாற்றானின் தாக்குதலாலும், மற்றும் அடி, எறி, தட்டு, வெட்டு, சிதைவு முதலியவற்றாலும் உடலுள்ளுறுப்புகள், எலும்புகள், நரம்புகள், தசைகள், சந்திபந்தனங்கள் பாதிக்கப்படுகின்றன. விபத்தில் காயமடைந்தோர் பின்-விளைவால் பல நோய்களுக்கு உடைந்தையாகின்றனர். இவர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காதது. இப்பரிதாப நிலை சிந்தனைக் குரியது; உடன் செயலாற்றலுக்குரியது. இக்காரணத்தின் பூரணத்தை இன்றைய நவீன மருத்துவ உலகு அறியாது இருக்கின்ற நிலமையைச் சுட்டிக் காட்டவே இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

இந்திய மருத்துவப்படி மனித உடலமைப்பு தொண்ணூற்றாறு தத்துவங்களை கொண்டது. தத்துவ அடிப்படையில் பல உயிர் நிலையங்கள் உடலில் இயங்குகின்றன. உயிர் நிலையங்களில் ஏற்படும் பாதிப்புக்கு, சிகிச்சையளிக்கும் ஒரே முறை வர்மாணி மருத்துவம். சித்த மருத்துவத்தில் வர்மாணி மருத்துவம் தொன்றுதொட்டு இரகசியமாய் இருந்து வருவதாகும்.

ஒருவன் விபத்தில் சிக்கினால், இருவித பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒன்று, அவனின் உடலில் காணும் சிராய்ப்பு, எலும்பு முறிவு போன்றவை. இன்னொன்று உயிர் நிலை பாதிப்புகள். இன்று உயிர்நிலைப்பாதிப்பால் (வர்மப்பாதிப்பால்) மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு வர்மப்பாதிப்புக்குரிய சிகிச்சையளிக்காது-தெரியாது- மற்றைய பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. உயிர் நிலையங்களில் ஏற்பட்ட வர்மப்பாதிப்புகளுக்குத் தக்கதாய சிகிச்சை பெறவழியின்றி மனிதன் அவதியுறுகின்றான். வர்ம பாதிப்பால் பிந்திய வாழ்நாளில் ஈடுநோய்களும், வர்மம் நிமித்தம் எழும் இதரநோய்களும், உடல் நலிவும் ஏற்படுவதோடு, வாழ்நாளும் பேரளவு குறைகின்றது.

இன்னும், நோயாளி மருத்துவமனைக்கு வந்தால், வர்மத்தால் ஏற்படும் காரணத்தை ஒரு பெரும் பொருட்டாகக் கருதாது ஏனையக் காரணங்கள் மட்டும் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்டு மருத்துவம் செய்யப்படுகிறது. இந்நிலமை வருந்தத்தக்கது மட்டுமல்ல அறியாமையின் சிறப்புச் சின்னமாகவும் இருந்து வருகிறது.

காவல் நிலையங்களில் குற்றவாளியிடம் உண்மையை வரவழைக்க, குற்றவாளி தாக்கப்படுவது சாதாரண செயலாகும். இன்னும், ஜூடோ, கராத்தே பயிற்சியால் பலர் தாக்கப்படுகின்றனர் இப்பயிற்சி நாட்டில் பெருகிக் கொண்டிருக்க, மக்கள் உடலும். பாதிக்கப்பட்டு வருகின்றது. தாக்குண்டோர் வெளியே யாதொரு தடயங்கள் இன்றி இறந்து விடுவதுமுண்டு. அது உடலில் நிலவும் உயிர்நிலை பாதிப்பால்—வர்மப் பாதிப்பால் ஏற்படும் விளைவாகும்-வேண்டுதல் பேரில் அல்லது சட்டரீதியில் இறந்தவரின் உடல் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறது. இங்கு, உடலில் வெளிப்படையாகக்காணும் தடயங்களை வைத்து இறப்பின் காரணம் நிச்சயப்படுத்தப்படுகிறது. உயிர்நிலையங்கள் தாக்கப்பட்டு இறந்திருந்தால், நவீன மருத்துவப்படி தடயங்களை காணமுடியாது. இதற்கு அனுசரனையாக வழிவகை செய்வது சித்த மருத்துவத்தைச் சார்ந்த வர்மாணி மருத்துவ அறிவு ஒன்றேயாகும்.

தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மனித உடலில் இருபத்தைந்து உயிர்நிலையங்களும், கழுத்துக்கும் நாபிக்கும் இடையில் நாற்பத்தைந்து உயிர் நிலையங்களும், நாபிக்கும் குதத்துக்கும் இடையில் ஒன்பது உயிர் நிலையங்களும், கரங்களில் பதினான்கு உயிர் நிலையங்களும், காலில் பதினைந்து உயிர் நிலையங்களுமாக மொத்தம் 108 உயிர் நிலையங்கள் உண்டு. இதில் படுவர்மம் 12, தொடுவர்மம் - 96 யென வர்ம வன்மைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தத்துவப்படி உருவான உடலில் எலும்புகளையும், மூட்டுகளையும் வாதமும், தசைகளை பித்தமும், நரம்புகளை சிலேற்பனமும் ஆட்சி செய்கின்றன. எனவே வர்மப் பாதிப்பால் வாதம் சம்பந்தப்பட்ட நோய்களும், பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களும், கபம் சம்பந்தப்பட்ட நோய்களும் உடலில் எழுகின்றன. வாத-பித்த-சிலேற்பன அரசர்களுக்கு அமைச்சர்களாய் இயங்குவது நூற்றெட்டு உயிர் (வர்ம) நிலையங்கள். இன்னும் உயிர் நிலை-

யங்களுக்கு பன்னிரண்டு அடங்கல்கள் படைத்தலைவர்களாக நின்று உடலைக் காவல் புரிகின்றன.

வர்மாணி மருத்துவத்தின் மூலம், வர்மப்பாதிப்பை நலப்படுத்த இளக்குமுறை, தடவல், நசியம், மாந்திரீயம், மருந்துவகைகள் போன்றவை தரப்படுகின்றன.

இப்படியாக வர்மாணி மருத்துவத்தின் நுணுக்கங்கள், நூற்றுக்கணக்கான வர்ம நூல்களில் காணக்கிடக்கின்றன. குறிப்பாக 'வர்ம ஒளி நூல்' 'வர்மக்கண்ணாடி', 'வர்ம ஒடி முறிவு சாரி', 'உயிர்பாதி, உடல் பாதி உடலுயிர் பாதி நிலையங்கள்' போன்ற நூல்கள் முக்கியமானவை. வர்மாணி மருத்துவத்தை பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு மருத்துவக்கல்லூரிகளில் மூன்றாண்டு வர்மப் பயிற்சித் தந்து சான்றிதழ் வழங்கலாம். இதனால் வர்ம சிகிச்சையின் அறிவு பெருகுவதோடு, வர்மாணி மருத்துவத்தின் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்களின் உடல் நலனை பேணவும், அநியாயமாக மாண்டு வரும் ஆயிரமாயிரம் மக்களின் உயிரைக் காக்கவும் முடிவதோடு, வர்மத்தின் காரணமாக ஏற்படும் பல நோய்களுக்கு வர்மாணி முறைப்படி தக்க சிகிச்சை நல்கி நலமும் காணலாம்.

மணிவாசகரும் வடமொழியும்

இத்தொல்லுலகம் அறிந்துள்ள நூல்களில் மிகப்பழையது ரிக்வேதம். அதன் காலத்தை இன்னும் சரியாக நிர்ணயிக்கவில்லை அத்தகயை புராதன கலைக்களஞ்சியம் ஸம்ஸ்கிருத மொழியில் உருவாகி இருக்கிறது. ஆதலால் அந்த மொழி ரிக் வேகத்திற்கும் முந்தையது என்பது தேற்றம். மாணிக்க வாசகர் அம்மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தது திருவாசகத்தில் வரும் திருப்புள்ளி எழுச்சி நான்காவது பாடலில் தெளி வுறுத்தப்படுகிறது. ஸம்ஸ்கிருதம் என்னும் சொல்லானது தெளிவுறத்திருத்தி அமைக்கப்பெற்றது என்று பொருள்படுகிறது. ஆதியில் அது பிராகிருதமாயிருந்நபி பின்பு அது ஸம்ஸ்கிருதம் ஆயிற்று. பழந்தமிழ் செந்தமிழ் ஆனதுக்கு நிகர் அது.

சுவாமி சித்பவானந்நர்.

தருமை ஆதீனத்தில் விழா

சோழ நாட்டு மயிலாடு துறையில் சைவப்பயிர் தழைக்கப் பெரும் பணி புரிவது தருமை ஆதீனம். இதனை நிறுவிய ஞானபிதா குருஞானசம்பந்தர் ஆவர். பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் பூம்புகாரை நோக்கிக் கடலாடப் போந்த தஞ்சை மன்னன் குருஞானசம் பந்தரின் அருட்செல்வம் கண்டு பூரித்துத் தந்த பொருட் கொடையே ஆதீனத்தின் இன்றைய சொத்து. தமிழ், வடமொழிக் கல்லூரிகளையும். திருமறைப்பள்ளிகளையும் கடந்த முப்பதாண்டு-களுக்கு மேலாகத் திறம்பட நடத்தி வருவது ஆதீனத்தின் அளப்பரும் தொண்டு. இச்சைவ மடத்தினர் எடுக்கும் ஆவணிமூலப்பெருவிழாவில் கற்றுவல்ல மூதறிஞர்களை அழைத்துப் பாராட்டிப்பட்டம் வழங்குவதும் ஆண்டு தோறும் நடக்கும் அருஞ்செயலாகும். ரா.பி. சேதுப்பிள்ளை. கி.வா.ஜகந்நாதன், ஏ.சி.செட்டியார், மா. இராசமாணிக்கனார், கீ. இராமலிங்கனார் ஆகியோர் பட்டம் பெற்ற தமிழறிஞருள் ஒரு சிலராவர்.

அருந்தமிழ்ப் பெரும் பணியைச் சிரமேற் கொண்டு ஆற்றிய அறிஞர் பட்டியலில் இந்த ஆண்டு இடம் பெறுபவர் டாக்டர். சித்தலிங்கையா ஆவர். சைவசித்தாந்த வித்தகர் என்று இவர் பட்டம் பெறுவது சாலவும் பொருத்தம். மதுரைப்பல்கலைக்கழகத்து அஞ்சல் வழிக் கல்வி இயக்குநராகப் பணி புரியும் இத்தமிழறிஞர் சைவசித்தாந்தத்துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். 1962-ஆம் ஆண்டு மதுரை ஆதீனமும் சித்தாந்தச் செல்வர் என்று பட்டம் வழங்கியுள்ளது. ஆரவாரம் இல்லாது அடக்கமுடன் இன்றமிழ்த் தொண்டு செய்வதில் நம்பிக்கை கொண்டவர் இந்த அறிஞர். 15-9-83 வியாழனன்று தருமையாதீனம் சண்முகதேசிக சுவாமிகள் பூமாலை சூட்டிப் பொன்னாடை போர்த்தியபோது நன்றியுணர்வு பொங்க இவர்அளித்த பதிலுரையே இதற்குச் சான்று :

"ஆவணி மூலத்திருநாளில் யான் பாராட்டப்படுகிறேன் காசியில் பணி புரிந்தபோது அருணந்தி சுவாமிகள் இதே நன்னாளில் தாயினும் சாலப்பரிந்து நிறை பாற் சொம்பு ஒன்றனைப் பரிசளித்-தார்கள். இறையருள் முன்னிற்க எளியேனும் பாராட்டப்படும் இந்-நன்னாளில் என்னை ஆட்கொண்டு வழி நடத்திய எனது ஆசிரியப் பெருமக்களை நினைவு கூர்ந்து வணங்குகிறேன்.

"நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்"

என்ற அபிராமி பட்டரின் வாக்கினை இவர் மேற் கோள் காட்டிப் பேசியது குறிப்பிடத்தக்கது.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அருட்பணி புரியும் தருமைத் திருமடத்திற்கு நமது வணக்கமும் பாராட்டுகளும் உரியன.

சிந்துவெளி நாகரிகம் பற்றிய புதிய செய்தி:

எகிப்திய, மெசபட்டோமிய நாகரிகங்களில் தான் அறிவியல் பிறந்தது; இவையிரண்டும் சிந்து வெளி நாகரிகத்துக்கு முந்தியவை என்பதே அறிஞர் கருத்து. டாக்டர் எரிக்கா மவுலா எனும் பின்லாந்து நாட்டு அகழ்வாய்வு நிபுணர் இதனை மறுத்துள்ளார். மொகஞ்சோதராவில் அண்மையில் தோண்டி எடுக்கப்பட்ட ஐந்து யோனிக்கற்களைத் தமது கருத்துக்கு ஆதாரமாக அவர் காட்டுகிறார். இவற்றை லிங்கக் கற்கள் என்றும் அழைக்கிறார்கள். 40 கிலோ எடையுள்ள தட்டையான இக்கற்கள் 45 சென்டிமீட்டர் விட்டம் உடையவை. வழவழப்பான இக்கற்களின் இருபக்கங்களிலும் பெருந்தொளைகளும் முக்கோண வடிவம் தரக் கூடிய மாதிரி சிறு சிறு தொளைகளும் உள்ளன. ஆண்டுக்குறிப்பேடாக (calendar) மட்டுமன்றி ஞாயிற்றின் ஒளியினையும், விண்மீன்களைப் பற்றி ஆராயவும் இக்கற்கள் பயன்பட்டிருக்கலாம் என்று இவர் கருதுகிறார். கிறித்து பிறப்பதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னமேயே சிந்துவெளி மக்கள் மிக்க வளமுடன் வாழ்ந்துள்ளனர். அறிவியல் கண்ணோட்டமும் அவர்களது சிறப்பியல்புகளில் ஒன்றாகும் என்பதற்கு இப்போது அகழ்ந்து எடுக்கப்பட்ட பெருங்கற்களே சான்றாகும்.

பிரேம் சந்த் — இரு மொழி நாவலாசிரியர்

பழநி, அரங்கசாமி
மதுரைப்பல்கலைக்கழகம்

பிரேம் சந்த் எனும் புகழ் பெற்ற நாவலாசிரியர் உருது, இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் நாவல், சிறுகதை கட்டுரைகள் ஆகியனவற்றைத் திறம்படப்படைத்தவர். ஆங்கில ஆட்சியினை இந்திய நாடு முழுதும் ஒரு முகமாக நின்று எதிர்த்த காலத்தே இவர் வாழ்ந்தவர். எனவே சமகாலத்திய பொருளாதார, சமூக அரசியல் மாற்றங்களின் தாக்கங்களை இவரது படைப்புகளில் காண முடிகிறது. தனக்கு முன்னிருந்த பழைய மரபுகளை இவர் பின்பற்றினார் என்று கூறுவதைவிட தனக்கென்று ஒரு புதிய பாட்டையைத் தோற்றுவித்துக் கொண்டவர் என்றே கூறலாம். ஆரம்பப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் நம் நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் பங்கு கொண்டதனால், காந்தியத்தாக்கம் இவரது நாவல்களில் ஊடுருவிக்கிடக்கிறது. ரஷ்ய நாட்டு விடுதலை வீரர் லெனின் காலத்தே மாக்ஸிம் கார்க்கியின் நாவல்கள் செய்த பணியை நமது நாட்டில் காந்தியப்போராட்டகாலங்களில் வடமாநிலங்களில் பிரேம்சந்தின் நாவல்கள் செய்தன.

இலக்கிய உலகிற்கு பிரேம் சந்த் ஆற்றிய பணி ஈடு இணையற்றது. படைப்புப்பணியில் அவர் ஈடுபட்ட 30 ஆண்டுகளில் பன்னிரண்டு நாவல்கள், முந்நூறுக்குமேற்பட்ட சிறு கதைகள் கட்டுரைகள் மூன்று நாடகங்கள் வரலாற்று நூல்கள் ஆகியவற்றை எழுதிக்குவித்திருக்கிறார். பகுத்தறிவுக்கு ஒவ்வாதபழங்கற்பனைகளும் புராணக்கதைகளும் மண்டிக்கிடந்த உருது, இந்தி மொழிகளின் தேய்ந்துபோன அடிச்சுவட்டிலிருந்து ஒரு மறுமலர்ச்சிப்பாதையில் நிமிர்ந்து நடந்த பெருமை பிரேம் சந்துக்கு உண்டு. வெள்ளைய ஆதிக்கத்தினைப் பொறுக்காது மனம் புழுங்கிக்கிடந்த இந்திய சமூகத்தினை இவரது எழுத்துக்கள் படம்பிடித்துக்காட்டின. பெண்ணுரிமை வற்புறுத்தப்பட்டதோடன்றி, ஆண்களும் பெண்களும் சமம் என்ற கருத்தும் இவரது நாவல்களில் வெளிப்பட்டன. சமுதாயத்தின் ஆணிவேராகத்திகழும் பாட்டாளி மக்கள், உழவர்கள் இவரது நாவல்களில் பெருமைப்படுத்தப்பட்டனர். ஜமீன்தார்கள், பெரும்பணக்காரர்கள் ஆகியோரின் பிடியிலிருந்து உழவர் சமுதாயம் விடுதலைபெற்று வெளிவரவேண்டும் என்று இவர் போர்க்குரல் கொடுத்தார். வீழ்ந்த வரை எழுப்புகின்ற உயிருள்ள இலக்கியங் களாகத் தான் தமது படைப்புகள் விளங்கவேண்டும் என்று

பிரேம் சந்த் விரும்பினார். ஒரு எளிய வேளாண் குடும்பத்தில் பிறந்து வாழ்க்கையின் பல்வேறு படிகளைக்கடந்து தட்டுத்தடுமாறி முன்னேறிய ஒருவரது நாவல்களில். மேட்டுக்குடியினரின், பகட்டும் ஆடம்பரங்களும், ஆணவமும் ராஜபோக வாழ்க்கையும் சித்தரிக்கப் படவில்லை என்பது முற்றும் பொருத்தமேயாகும்.

1880-ஆம் ஆண்டு ஜூலை த்திங்கள் 30-ஆம் நாள் காசிக்கு அருகில் ஒரு சிறிய கிராமத்தில் பிரேம்சந்த் பிறந்தார். இவரது தந்தை அஞ்சல் துறையில ஊழியராகப் பணிபுரிந்தவர். பிரேம் சந்திற்குப் பெற்றோர் இட்டபெயர் தனபதிராய். இவரது எட்டாவது வயதில் அன்னையை இழந்தார். தந்தை மறுமணம் செய்து-கொண்டார். அந்தக் காலங்களில் படிப்பு வாசனையற்ற பாமர-மக்கள் நிறைந்த கிராமங்களில் பிறருக்குக் கடிதம் எழுதுவதிலும், நிலஉடைமைப்பத்திரங்கள் எழுதுவதிலும் இவரது தந்தையாருக்கு போதிய வருமானம் கிடைத்தது. இரண்டாவது மனைவியின வற்புறுத்தலுக்கு இணங்கி தனது மகன் தனபதிக்கு இளமை-யிலேயே மணம் செய்வித்து விட்டார். மணமகனுக்கு அப்போது வயது பதினைந்து. இத்திருமணம் நடந்து முடிந்து ஓராண்டு கழிந்த பின்னர் தந்தையார் இறந்து விட்டார். இத்துயர நிகழ்ச்-சிக்குப் பின்னர் தனது சிற்றன்னை, அவரது குழந்தைகள் தனது மனைவி ஆகியோர்அடங்கிய முழுக் குடும்பததையும் சுமக்க வேண்டிய பொறுப்பு தனபதியின் தலையில் விழுந்தது.

உள்ளூரில் ஆரம்பக்கல்வி முடிந்தவுடன் காசி நகரில் தான் உயர்நிலைப்படிப்பினைத் தொடங்கினார். ஒன்பதாம் வகுப்பில் பயிலும்போதே காலை மாலைகளில் சிறு குழந்தைகளுக்கு தனிப் பயிற்சி (Tuition) அளிப்பதன் மூலம் சிறு வருவாய் கிடைத்தது. அதற்காகக் காலையில் எட்டு மணியளவில் வீட்டைவிட்டுப் புறப்-பட்டால், இரவு வெகு நேரம் கழித்துத்தான் திரும்ப முடிந்தது. தனது பாடங்களைச் சரிவரப் பயில முடியவில்லை. குறைந்த மதிப் பெண்களைத் பெற்று எப்படியோ பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். மேற்படிப்புக்கு பணவசதி இல்லை. இதற்கிடையில் இவரது நண்பர் ஒருவர் மாதம் ஐந்து ரூபாய் சம்பளத்தில் செல்வந்தரான வக்கீல் ஒருவரின் பையனுக்குத் தனிப்பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தார். வக்கீல் பங்களாவில் குதிரை

லாயத்துக்கு மேலிருந்த ஒரு அறையில் தங்கிக் கொண்டார். வக்கீல் வீட்டில் கிடைத்த ஐந்து ரூபாய் மாத வருமானத்தில் மூன்று ரூபாயை வீட்டுக்கு அனுப்பி விட்டு இரண்டு ரூபாயைத் தனது செலவுக்கு வைத்துக் கொள்வது இவரது வழக்கம். காலையில் பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து முடித்ததும், தான் சமைத்த எளிய உணவினை உண்டு விட்டு மத்திய நூலகத்துக்குச்- செல்வார். இங்கு அமர்ந்து மணிக்கணக்காகப் படித்த பயிற்சியும் இலக்கியத்தொடர்புமே பின்னால் நாவல் எழுதுவதற்குத் துணை நின்றது என்று கூறலாம்.

போதிய வருமானம் இன்றி பற்பல நாட்கள் தனபதிராய் பட்டினி கிடந்ததும் உண்டு. சில நாட்களில் இரண்டு பைசா கொடுத்து வறுத்த கடலைப்பருப்பு வாங்கி வெறும் வயிற்றுக்கு இரை போட்டது உண்டு. தொடர்ந்து சில நாட்கள் அரை குறைப்பட்டினி. பழைய பாட புத்தகங்களைப் பொறுக்கி பாதி விலைக்கு விற்க முயற்சிக்கும்போது சந்தித்தார் ஒரு முதியவர். ராய் மீது இரக்கப்பட்ட அந்த முதியவர் ஒரு மிஷனரிப் பள்ளியின் தலைமையாசிரியர். காசியிலிருந்து இருபது கல் தொலைவில் உள்ள அப்பள்ளியில் தனபதிராய் பதினெட்டு ரூபாய் ஊதியத்தில் ஆசிரியராகப் பதவியேற்றார். வெள்ளையப் பாதிரியார்களால் நடத்தப்பட்ட அப் பள்ளியில் விடுதலை வேட்கை மீதூரப் பெற்ற தனபதியால் நீண்ட காலம் பணியாற்ற முடியவில்லை. அலகபாத் நகரில் ஆசிரியப் பயிற்சிக்கு வாய்ப்பு கிடைத்தது. 1903 - ஆம் ஆண்டு முதல் பயிற்சி பெற்ற முழுநேர ஆசிரியராகப் பணி புரியத் தொடங்கினார்.

காசியிலிருந்து வெளிவந்த மாதப்பத்திரிகை ஒன்றில் தனபதி ராய் ஒருபுனைப்பெயரில் எழுதிய 'ஆலயத்தின் ரகசியங்கள்' என்னும் நாவல் தொடர்கதையாக வெளியாயிற்று. கோவில் அர்ச்சகர்களின் சூதும் வாதும் சுரண்டலும், புரட்டும் கதையின் மையக்கருவாக அமைந்திருந்தது. 'நவாப் ராய்' என்னும் புனைபெயருடன் இவர் எழுதிய மற்றொரு உருது நாவல் ஜமானா என்னும் வார இதழில் கான்பூரிலிருந்து வெளிவந்தது. 1905-ஆம் ஆண்டு கான்பூருக்கே மாற்றலாகியதனால், பத்திரிகை ஆசிரியர் பலருடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1906-ஆம் ஆண்டில் பிரேமா என்னும் இவரது இந்தி நாவல் முழுப்புத்தகமாக வெளியிடப்பட்-

டது. விதவை மறுமணத்தை இந்த நாவல் பலமாக ஆதரித்தது. கதையெழுதும் பணி இவருக்கு கைவந்த கலையாக மாறிக் கொண்டிருந்தது.

இந்த ஆரம்ப ஆசிரியர் எழுத்தாளராக மாறி வெளியுலகில் பேரும் புகழும் பெற்றாலும், வீட்டில் நிம்மதியில்லை. அவரது சிற்றன்னைக்கும், மனைவிக்கும் உடன்பாடின்றி வீட்டில் சண்டையும் சச்சரவும் தொடர்ந்தன. தனிக்குடித்தனம் வைத்தாலன்றி இங்கு வரமாட்டேன் என்று சொல்லித் தனது தந்தையின் வீட்டுக்குச் சென்ற மனைவி கடைசிவரை திரும்பவேயில்லை.

எதிர்கால வாழ்வு அவரது இல்லறத்தைப் பொறுத்தவரையில் இருண்டுவிட்டது. ஆயினும் அவர் மனங்குன்றவில்லை. விதவை மணத்தை ஆதரித்து வெறும்பேச்சு பேசிப் பயனில்லை; செயற்படுத்திக் காட்டவேண்டிய தருணம் வந்துவிட்டது என்றே எண்ணினார். பதினொரு வயதில் கணவனை இழந்த ஒரு பெண்ணைப் பற்றிய விளம்பரம் வந்திருந்தது. பலத்த எதிர்ப்புக்கிடையில் சிவராணிதேவி என்னும் அப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

தனபதிராய் இலக்கிய உலகில் ஏற்றம்பெற்ற எழுத்தாளராக அப்போது பேரும் புகழும் பெற்றிருந்தார். கதையெழுதும் பணியோடு மொழிபெயர்ப்பும் தொடர்ந்து நிகழ்ந்தது. தாகூர், டால்ஸ்டாய் ஆகியோரின் சிற்சில சிறுகதைகளை உருதுவில் பெயர்த்தெழுதினார். மாஜினி, கரிபால்டி ஆகிய ஐரோப்பிய விடுதலை வீரர்களின் தொண்டினைப்பற்றிய தாக்கத்துடன் இவரது சிறுகதைகள் 1908-ஆம் ஆண்டு ஒரு தொகுப்பாக வெளியாயின. இந்தக் கதைகளில் தனபதிராயின் நாட்டுப்பற்று வெளிப்படையாகத் தெரிந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இச்சிறுகதைகளின் பற்பல பகுதிகள் மறைமுகமாகத் தாக்கின. இதன் பின்விளைவுகளைப் பற்றி சிறிதும் எண்ணிப் பார்க்காமல் இச்சிறுகதைத் தொகுதியினை பத்திரிகை அலுவலகம் வெளியிட்டுவிட்டது.

அப்போது தனபதிராய் பந்தல்கண்ட் எனுமிடத்தில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அருகாமையில் இருந்த ஒரு நகரத்தில் முகாமிட்டிருந்த வெள்ளைக்கார கலெக்டரிடமிருந்து

அவரைச் சந்திக்க வேண்டும் என்று ஆணை வந்தது. அது குளிர்-காலம். நடுக்கும் குளிரையும் பொருட்படுத்தாது இரவில் முப்பது கல் தொலைவு ஒரு மாட்டு வண்டியில் பயணம் செய்து கலெக்டரை அதிகாலையில் தனபதிராய் பார்த்தார். சிறுகதைத் தொகுப்பு தாம் எழுதியதே என்று ஒத்துக் கொண்டார். ''மொகலாயர்களின் காலமாக இருந்தால் இந்த ராஜ துரோகச் செயலுக்கு உமது கை துண்டிக்கப்பட்டிருக்கும். பரவாயில்லை. நீர் எழுதியவற்றில் மீதம் இருக்கும் பிரதிகளை உடனடியாக அரசிடம் ஒப்படைக்கவும். இனிமேல் கதையோ, நாவலோ, கட்டுரையோ எழுதுவதாயின் அரசிடம் அனுமதிபெற வேண்டும்'' என்று ஆணைபிறந்தது. அச்-சடிக்கப்பட்டவற்றில் விற்ற முந்நூறு பிரதிகளைத் தவிர மீதமிருந்த 700 பிரதிகள் அரசினரிடம் கொடுக்கப்பட்டன. கதையாசிரியர் எச்சரித்து விடப்பட்டார். இந்த அடக்குமுறைக்கு தனபதிராய் உளமார இணங்கவில்லை. வெளியில் யாருக்கும் தெரியாமல் இது வரையில் இருந்த புனைபெயரை மாற்றி 'பிரேம்சந்த்' என்று ஒரு புதிய பெயரை வைத்துக்கொண்டார்.

தனபதிராய் வெள்ளைய ஆட்சியின் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்காக இரகசியமாக வைத்துக்கொண்ட பிரேம்சந்த் என்னும் இந்தப் புனைபெயரே காலப்போக்கில் நிலைத்துவிட்டது. இங்கி-லாந்தில் சர் ஆர்தர் கானன் டாயில் எனும் கதாசிரியர் படைத்த பாத்திரங்களில் ஷெர்லாக் ஹோம்ஸ் என்பார் சிறந்த துப்பறியும் நிபுணன். ஷெர்லாக் ஹோம்சுதான் மக்கள் நினைவில் மாறாத இடம் பெற்றிருந்தாரே தவிர எழுத்தாளர் அல்ல. அதுபோன்று தனபதிராய் என்ற இயற்பெயர் மறைந்து பிரேம்சந்த் என்ற புனை பெயர்தான் நாடு முழுதும் அறிமுகமாயிற்று. 1910-ஆம் ஆண்டு முதல் ஜமானா என்ற உருது இதழில் வந்த கதைகளும், கட்டுரை களும் தேசீய உணர்வையும். மொழிப்பற்றினையும் வலியுறுத்தின. ராஜபுதன வீரர்களின் தன்னலமற்ற தியாக சிந்தையும், மான உணர்வும் இவரது சிறுகதைகளில் சிறப்பிடம் பெற்றன.

பந்தல்கண்ட் மாவட்டத்தின் ஆரம்பப் பள்ளிகளை ஆய்வு செய்யும் பணிக்கு இவர் மாற்றப்பட்டார். பற்பல ஊர்கள்தோறும் சுற்றி வருகின்ற இந்த அலுவலில் அலைச்சல் மிகுதி. உணவு செரிக்காமல், வயிற்றுப்போக்கு நோயினால் மிகவும் தொல்லைப்-பட்டார். எழுதும் பணி மட்டும் நிற்கவில்லை. லக்னோ, பனாரஸ்

அகமதாபாத் ஆகிய நகரங்களில் தங்கி மருத்துவம் பார்த்துக் கொண்டார். இருப்பினும் கடைசிக் காலம் வரை இவரைப் பீடித்த கழிச்சல் நோய் இவரை விட்டு அகலவேயில்லை.

கோரக்பூர் எனும் மாவட்டத் தலைநகரில் பணியாற்றும்போது பி.ஏ. தேர்வு எழுதி வெற்றி பெற்றார். கான்பூரிலிருந்து வெளிவந்த 'பிரதாப்' எனும் இதழும், அலகபாத் நகரிலிருந்து வெளியாகிய சரஸ்வதி எனும் மாத இதழும் இவரது இந்திமொழிச் சிறுகதை-களை தொடர்ந்து வெளியிட்டன. இந்தி புஸ்தக் ஏஜன்சி எனும் கல்கத்தா நூல்வெளியீட்டகம் பஸா-ரே எனும் நாவலுக்கு ரூ 450 கொடுத்தது- இதுவே ஒரு எழுத்தாளனுக்கு அந்தக் காலத்தில் கிடைத்த அதிகப்படியான தொகை என்று கூறலாம்.

இந்த நாவலே சேவாசதன் என்ற பெயரில் இந்தி மொழி-யிலும் வெளியாயிற்று. இளமையில் மிகவும் ஆடம்பரமாக வளர்க்கப்-பட்ட ஒரு பெண்ணின் கதையே இது. அரசுப்பணி புரிந்து கொண்-டிருந்த அவளது தந்தை கையூட்டுப் பெற்றமைக்காக வழக்கு மன்றத்தில் தண்டிக்கப்பட்டு பதவியிழந்து சிறை செல்கிறார். படாடோபமாக வளர்க்கப்பட்ட இந்தப்பெண் இப்போது சாதாரண வாழ்க்கைக்குத் தன்னை மாற்றிக் கொள்ள முடியவில்லை. குறைந்த ஊதியம் பெறும் ஒரு குமாஸ்தாவின் மனைவியாக இருக்க மனம் ஒப்பவில்லை. வெளியுலகில் காணும் தாசிகளின் வாழ்க்கை வள-மானது போலத் தோன்றியது. பட்டு அணிந்து நகையைப்பூட்டி மேனியை மினுக்கி ஆடம்பரமாக வாழும் விலைமாதர் வாழ்க்கையில் இவளுக்கு நாட்டம் ஏற்பட்டது. இனிய குரல் கை கொடுத்தது. சிறந்த பாட்டுக்காரியாக மாறினாள். ஐயத்துக்கு இடமான சூழ்-நிலையில் கற்பைப் பறிகொடுக்கும் நிலையில் இவள் சுய உணர்வு மேலோங்கி விட்டது. மானத்தைப் பறி கொடுக்கவில்லை. இருப்பினும் விபச்சாரியாக பட்டம் சூட்டப்பட்டு வழுக்கி விழுந்த வனிதையர் விடுதியில் சேர்க்கப்படுகிறாள், இந்தி மொழியில் இந்நூல் வெளியான போது ஆயிரக்கணக்கான பிரதிகள் விற்பனை ஆயின.

1917 - ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியான பிரேம் சந்த் சிறுகதைகள் சமுதாயத்தில் நலிந்த பகுதியினரைப் பற்றியதாக இருந்தது. இயற்கையை நம்பி நிலத்தை உழுதுபோட்டு விதையைத் தூவி விட்டு விரிந்து பரந்த வெறும் வானத்தைப் பார்த்து ஏக்கப்

பெருமூச்சு விடும் வேளாண் மக்களின் வேதனையைப் படம் பிடித்துக் காட்டியது. இவரது எழுத்து வன்மை நாடறிந்த உண்மையாகி விட்டது. முதலாம் உலக யுத்தம் நடக்கின்ற காலம் அது. தயா நாராயண் எனும் நண்பர் போர்க்கால நடவடிக்கை பற்றி அரசினர் வெளியிட இருக்கின்ற ஒரு வார இதழின் ஆசிரியராகப் பணியாற்ற வேண்டிக் கொண்டார். நாட்டுப்பற்று மிகுந்த பிரேம் சந்த் அதனை மறுத்து விட்டார். ஆங்கிலேயரின் அரவணைப்பால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு போகும் மத்திய தரவர்க்கத்தினரை பிரேசந்த் உளமார வெறுத்தார். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வேளாண்குடி மக்களாக இருக்கும் இந்தியநாட்டில், உழவர்களும் தொழிலாளர்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்று விரும்பினார். பிரேமசிரம் எனும் நாவலில் வரும் இளைஞன் ரஷ்யா போன்ற பொது உடைமை நாடுகளைச் சான்று காட்டி வீழ்ந்து கிடக்கும் ஏழை மக்கள் வீறு கொண்டெழுந்து புரட்சி செய்ய வேண்டும் என்று சொல்மாரி பொழிகிறான். காந்தியத்தாக்கம் ஏற்படவில்லையாயின் பிரேம்சந்த் காலப்போக்கில் தீவிர கம்யூனிசவாதியாக மாறியிருப்பார் என்பது ஒரு இலக்கிய மதிப்பீடு. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று புரிந்த காந்தியமே இவரைக் கவர்ந்து கொண்டது.

ஜாலியன் வாலாபாக் படுகொலை 1919-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இமய முதல் குமரி வரை இந்திய மக்கள் கொதித்து எழுந்தார்கள். ஒத்துழையாமை இயக்கம் வேரூன்றத் தொடங்கி விட்டது. காந்திஜி அப்போது கோரக்பூர் என்னும் நகரத்துக்கு வருகை தந்தார். இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடி-யிருந்தனர். தேசீய எழுச்சியால் உந்தப்பட்ட அந்த மக்கட் கூட்டத்தையும், அதனைக காந்தம் போல் கவர்ந்து நின்ற மகாதமா காந்தியாரையும் பார்த்த பிரேம்சந்தின் மனம் மாறிவிட்டது. இருபது ஆண்டுகளாக வகித்து வந்த அரசுப் பணியினை உதறித் தள்ளினார். அப்போதிருந்த நிலையில் பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் வாழும் இலட்சக்கணக்கான மக்களின் அன்றாட வருமானத்துக்கு கைராட்டையே கதி என்று நம்பினார். கதர்பிரச்சாரத்தில் இறங்கிப் பணி புரியத் தொடங்கினார்.

பதவியைத் துறந்து விட்டதனால், கோரக்பூரில் தங்காமல் பிரேம்சந்த் தனது சொந்த ஊருக்குத் திரும்பினார். சில ஆயிரம் ரூபாய் களும் நவநிதி என்ற கதைத்தொகுப்பு, சேவாசதன் என்ற நாவல்

ழீ கியவற்றால் கிடைத்த புகழுமே எஞ்சியிருந்தன. தன்னிச்சைப்படி படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும், இருந்த பிரேம் சந்தினால் நேரடிக் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியைக் காண முடியவில்லை. இவரது கதர்ப் பிரச்சாரமும், தேசீய உணர்ச்சியும் கிராமத்து மக்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. எனவே மீண்டும் கான்பூருக்கு வந்து பழைய நண்பர்களின் உதவியால் மார்வாரி உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பதவியேற்றார். எழுத்துப் பணியும் காங்கிரஸ் இயக்கப் பணியும் தொடர்ந்தன. பள்ளி நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட மனத்தாங்கலினால் பதவியைத் துறந்து விட்டார். அப்போதைய பிரேம்சந்தின் மனநிலையை 'பிரேரனா' எனும் அவரது சிறுகதை தெளிவாக விளக்குகிறது. வரதன் என்ற இந்திநாவலும், இவரே எழுதிய அந்நாவலின் உருது மூலமும் பின்னர் வெளியாயின. அனடோல் பிரான்சு எழுதிய தாய் என்ற நூலையும், ஜார்ஜ் எலியட்டின் புகழ்பெற்ற நாவல் சைலாஸ் மார்னர் ஆகிய இரண்டனையும் இந்தியில் பெயர்த்து வெளியிட்டார்.

வருமானம் ஓரளவு நிலைபெறத் தொடங்கியதும் தனது சொந்த ஊரில் ஒரு வீட்டைக் கட்டியதோடு, சரஸ்வதி அச்சகம் என்ற பெயரில் வெளியீட்டகம் ஒன்றையும் ஏற்படுத்தினார். ஏறத்தாழ ஒன்றரையாண்டு காலம் திருத்தியும், புதுக்கியும் இவர் வெளியிட்ட 'ரங்கபூமி' என்ற இந்தி நாவல் இவருக்கு இறவாத புகழுக்குக் காரணமாக அமைந்தது எனலாம். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவருக்கு அறிமுகமான ஒரு குருட்டுப் பிச்சைக்காரனே இந்த நாவலின் முக்கிய பாத்திரம் ஆகும். சோபியா என்று வரும் ஒரு பாத்திரம் சென்னை அடையாறில் இறைபணி இயக்கம் நடத்திய அன்னி பெஸன்ட் அம்மையாரை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டது. அமைதியான கிராமச்சூழ்நிலையை இயந்திரங்களும், ஆலைகளும் புகுந்து எப்படிக் கெடுக்கின்றன என்பது கதையோட்டத்தில் வரும் முக்கியமான கருத்தாகும். ரங்கபூமி பல்வேறு இந்திய மொழிகளிலும், சீன மொழியிலும் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து காயகல்பம், கர்மபூமி, நிர்மலா எனும் பெயரில் நாவல்களை இந்தியில் எழுதினார். 1930 - ஆம் ஆண்டுக்குப்பிறகு இந்தியில் வெளியாகிய இந்நூல்களை உருதுவில் பெயர்த்தும் வெளியிட்டார்.

பிரேம் சந்தின் ஒன்று விட்ட சகோதரர் நடத்திய இவரது அச்சகம் லாபத்தைத் தரவில்லை. நஷ்டத்தையே கொடுத்தது. பிரேம் சந்த் அச்சக நிர்வாகத்தைத் தானே ஏற்றுக் கொண்டார். அரசியல், இலக்கிய மாத ஏடான ஹம்ஸம் (1930) என்பதைக் கொஞ்ச காலம் நடத்தினார். லக்னோவில் இருந்து வெளிவந்த மாதுரி என்ற மாத இதழில் இணை ஆசிரியராகவும் பணி புரிந்தார். வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளப் பெரும்பாடு பட்டார் என்பது உண்மைதான். அதற்காகத் தன்மான உணர்வையும், நாட்டுப் பற்றினையும் அடகு வைக்க விரும்பவில்லை. பரங்கியர் ஈந்த ராவ்பகதூர் எனும் பட்டத்தைப் பெற மறுத்ததும், ஆல்வார் மன்னர் தந்த உயர்பதவியினை உதறித் தள்ளியதுமே இதற்குச் சான்றுகளாகும். இது தவறு என்று சொன்ன ஒரு நண்பரிடம்

"இச்சகம் பேசும் இழிதகவான வாழ்க்கையை
எம்மால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை" என்று

பதிலிறுத்தார்.

உப்பு சத்தியாக் கிரகத்தில் பங்கு கொண்டு ஏராளமான தொண்டர்களைத் திரட்டினார். இவரது மனைவியும் இவருடன் ஒத்துழைத்து தேசியப் போராட்டத்தில் சிறை சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. 1930-ஆம் ஆண்டுக்குப் பிறகு எழுதப்பட்ட இவரது சிறுகதைகளில் விடுதலைப் போராட்ட வீரர்களின் உணர்ச்சி யையும், அனுபவித்த இன்னலையும் தெளிவாகக் காண முடிகிறது. இவரது மாத இதழும், சரஸ்வதி அச்சகமும் அரசினரால் கண்காணிக்கப்பட்டது. பல்வேறு தடவைகளில் அரசின விதித்த பணயத் தொகை (Security) கட்ட நேரிட்டது. இந்தக் காலத்தே அவர் வெளியிட்ட கர்மபூமி என்ற நாவல் தீண்டாமை ஒழிப்பினை மையக் கருவாகக் கொண்டதாகும்.

1933-ஆம் ஆண்டு காசிநகருக்குப் போந்து ஹம்சம்-இதழினை மட்டும் நடத்தினார். போதிய இலாபம் கிடைக்கவில்லை ஜாகரண் என்னும் வார இதழினையும் நடத்திப் பாாத்தார். இதனாலும் பலன் கிட்டவில்லை. கடன் சுமை அதிகரித்தது. இதிலிருந்து மீள்வதற்கு எதிர்பாராத உதவி ஒன்று கிடைத்தது. சேவாசதன் எனும் நாவலைத் திரைப்படமாக எடுக்க விரும்பிய ஒரு பம்பாய் படக்கம்பெனி கணிசமான தொகையினைக் கொடுத்தது, ஆண்டுக்கு

ரூ. 8000/-வீதம் கொடுக்க வந்த அஜந்தா சினிடோன் எனும் பிறிதொரு கம்பெனி அவ்வப்போது கதை வசனம் எழுதிக் கொடுக்க இவரை அமர்த்திக் கொண்டது. விவேகம், நேர்மை என்ற நேர்க் கோட்டில் நிமிர்ந்து நடக்கும் பிரேம்சந்திற்கு விரசமும், இழிசினர் சுவையும் காட்டிப் பணம் குவிக்க எண்ணிய படமுதலாளிகளோடு ஒத்துப்போகவில்லை. வேறு வழியின்றி மீண்டும் பனாரஸ் வந்து பத்திரிக்கைப் பணியினைத் தொடர்ந்தார். கோதானம் என்பதே பிரேம்சந்த் எழுதிய கடைசி நாவல். வட்டிக்குப்பணம் வாங்கிய ஏழைக்குடிமகன் கோரி மாடிழந்து, மனைஇழந்து, நிலபுலங்களைப் பறிகொடுத்து சாலைபோடும் வேலையாளாக மாறி அங்கேயே மடிகிறான். சுரண்டல் இல்லாத சமுதாயமே சொர்க்க பூமி என்னும் உயரிய கருத்து இந்நாவலில் வலியுறுத்தப்படுகிறது.

இந்தி, உருது ஆகிய இருமொழிகளிலும் கதையும், நாவலும் படைத்த பிரேம்சந்த் இந்திய மொழிகளின் அனைத்து எழுத்தாளர்களும் கூடிய தேசிய அமைப்பு ஒன்று ஏற்படவேண்டும் என்று விரும்பினார். அதன் பயனாக அமைக்கப்பட்டதே பாரதீய சாகித்ய பரீஷத் எனும் இலக்கிய வட்டம். இதனுடைய முதல் கூட்டத்தை மகாத்மாகாந்தி முன்னின்று நடத்தி வைத்தார். இந்த அமைப்பின் சார்பாக வெளிவந்த மாத இதழும் பிரேம்சந்தின் சரஸ்வதி அச்சகத்திலிருந்தே வெளியாயிற்று. இந்த இலக்கிய வட்டப்பணியில் கே.எம். முன்ஷி, மகாத்மாகாந்தி ஆகியோருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு பிரேம்சந்துக்கு ஏற்பட்டது. உடல்நிலை சீர்கெட்டு மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் இயற்கைச்சூழல் நிறைந்த தனது கிராமத்துக்குப் போக வேண்டும் என்றும், தனது கடைசி மூச்சினை அங்கேயே விட வேண்டும் என்றும் விழைந்தார். ஆயிரம் ரூபாய் பணயத் தொகை கட்டவில்லையாயின் ஹம்ஸம் பத்திரிகையை மூட வேண்டும் என்ற அரசின் ஆணை வந்தது. நடமாட முடியாது படுக்கையில் கிடந்த நேரம் அது. மனைவியிடம் பணத்தைக் கொடுத்து பிரேம்சந்த் பணயத்தொகையை கட்டச் செய்தார். நிறுத்தப்பட்ட பத்திரிகை மீண்டும் மலர்ந்தது. ஆனால் மலர்ந்த இதழைக் காண்பதற்கு இயலாமல் பிரேம்சந்த் 1936-ஆம் ஆண்டு அக்டோபர் 8-ஆம் நாள் காலமாகி விட்டார்.

தேவர் திருமகன்

தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் பசும்பொன் முத்து-ராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் விழா ஒருதேசியத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டு தோறும் அக்டோபர் திங்கள் கடைசி வாரத்தில் மாமதுரையில் வெள்ளம் போல் திரளும் மக்கட் கூட்டத்தைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். 'தேசியம் எனது உடல்; தெய்வீகம் எனது உயிர்' என்று கூறி அரசியலையும் ஆன்மிகத்தையும் ஒருங்கே வளர்த்தவர் தேவர். சிறுமை கண்டு பொங்குவதும், பெருமை கண்டு பூரித்தலும் அவரது பிறவிக்குணங்கள். யாருக்கும் தலை வணங்காத சிங்க ஏறனைய இச்செம்மல் பற்பல தேசியத் தலைவர்கள் நாடிவந்து போற்றி வணங்கும் தரமும் தகுதியும் உடையவராக விளங்கியவர். அகில இந்தியத் தலைவர்கள் வரிசையில் இவரது வாழ்க்கை வரலாற்றினையும் அரசினரின் சார்பில் கொண்டு வரச் செய்வது நமது கடமையாகும். காலஞ் சென்ற வி.வி. கிரி அவர்களால் போற்றிப்புகழ்ந்து மதுரையில் திறக்கப்பட்டது தேவரின் வெண்கலச்சிலை. அதற்கு மாலையிட்டு அஞ்சலி செய்யும் தமிழக அரசு தேவரின் வாழ்க்கையினை நூல் வடிவாகக் கொணர ஆவன செய்ய வேண்டும்.

— ஆசிரியர்

(1) பசும்பொன்னைக் கவிந்து நின்ற
பைம்பூங் கொண்டல்!
பார் புகழும் தமிழகத்தின்
முகவைத் தென்றல்!
வல்லடியும் வழக்கடியும் வீணில் பேசும்
வம்பர்களைச் சுழன்றடிக்கும் வாடைக்காற்று!

வாயில்லாப் பூச்சிகளாம் ஏழைமக்கள்
வாணாளும் மகிழவந்த வசந்தம் அன்றோ!
அலையெனவே புரண்டு தொங்கும்
அழகான கருங் குஞ்சத்தான்
மலைபோன்ற திண்டோளன்; எதற்குமிங்கு
மலைக்காத நெஞ்சத்தான்;
சிவநெறியே காட்டும் செம்மல்
செந்தமிழின் ஊற்றுக்கோலான்.
தன்னிகரில்லாப் பேச்சும்
தங்குதடை அற்ற சொல்லும்
பொங்கிவரு பெரும் பேராளன்
புலமையும் போற்றும் பண்பன்!
அருந்தமிழ் மட்டும் இன்றி
ஆங்கிலப் பேச்சும் தன்னில்
கடல் மடை திறந்தாற் போலக்
கணீரெனப் பேசும் ஏந்தல்!

(2) வங்கம் ஈந்த சிங்கக் கொள்கை
பொங்கு தமிழகத்தில் புயல் போலப்பரப்பிவந்த
மங்காத தமிழன்! மறக்குலத்து வீரன்!
தங்க நிகர்த் தலைவன்! தரணிபுகழ்ச்சிங்கம்!

(3) ஆன்மீகம் கலந்து வந்து
அரசியல் தூய்மை செய்து
வான்புகழ் ஈட்டி வந்த
வையகப் பெரும் பேராளன்!

(வேறு)

(4) சிறுமை கண்டு சீறும் தன்மை
தூய்மை கண்டு வாழ்த்தும் தண்மை
வாய்மையைப் போற்றும் மாண்பு
தாய்மையைப் பேணும் பண்பு
தளராத செஞ்சொல் ஊற்று
தாரணியில் எங்கு காண்போம்?

— பழநி. அரங்கசாமி

"அந்நாள் வருமோ அம்மா?"

சி. சுப்புராயன்
திருச்சி

நூற்றுக்கணக்கான தமிழ்க்குடும்பங்கள் மனையிழந்து மக்களிழந்து கண்ணீர் மல்கக் கட்டிய உடையோடு தாய்த் தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இன உணர்வு மேலீட்டால் மாநில அரசு மைய அரசை நோக்குகிறது. மைய அரசோ உலகக் கண்ணோட்டத்தோடு இலங்கைப் பிரச்சனையை இணைத்துப் பார்க்கிறது. இந்த நிலையில் ஈழத்து அவலம் பற்றிய ஒரு மரபுக்கவிதையும், அக்கவிஞரே அளித்த அதன் உரைநடையும் ஈண்டு வெளியிடப்படுகின்றன.

— ஆசிரியர்.

கடல்வாய் வெருவிய கயல்வழி தணலோய்
  உடல்வேர்த் துயர்கை ஓடினை ஐயகோ
ஒறுகை மூசொலி உரக்கத் துரத்தின
  மறுகை புன்றலை மானம் ஒன்னலர்க்
காமோ ஈழத் தடுவளி பறந்தே
  சாமோ பழங்கதை சாற்றிய கொடுங்கர்கை
எரிமுன் செல்வம் எரிந்திடும் பிழம்புகண்
  டெறிந்தார் கொடுமை எதுபடும் உடலம்!
ஒல்கிய கற்பின் உயிர்போங் கதறி
  மல்கிய துயராம், மகிழ்வெதிர் என்னே
எண்ணீர் குருதி! என்புசாம் பர்கோ
  மண்புகா கொள்ளி மதியிலா நிலனே!
கட்டிய ஆடை ஒட்டிய வயிறாய்
  மட்டிலாக் கலக்கம் மண்டுவார் அடைக்கலக்
கொட்டடி நின்றே குலைநடுக் குற்றோய்
  எட்டடி ஏதே இரும்புதர் புலிவாய்
பட்ட கிள்ளை பைந்தொடி மான
  தட்டிலாத் தமராரும் தடவழி பிரிந்தார்
வெந்நிலை இகந்தே விடுத்தே ஏகியான்
  தன்கொழு நன்பால் தகைகெழு நல்லாய்
பீலி மேனி பிறங்கின அந்நாள்
  நாளும் வருமோ நலிந்தனை! மகவோ
உங்கிற் கழூஉம் உற்றிலா நெஞ்சொடு
  ஐம்புலப் பெயநின் அம்மகிழ் வருமோ
ஓயா உணர்ச்சி உன்தாய் நாட்டிற்
  காயாய் மலியக் கண்டோ நாவாய்
வந்தே இறங்கினை துயரம்
  சிந்தஇங் காமோ செயல்கொள வாகையே!

திரண்ட பொருள்

வெந்நீர்க் கடலில் வேகும் மீனை ஒத்த துடிக்கும் விழியாளே உடல் வேர்க்க வேர்க்க உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஐயகோ வென நடுங்கி ஓட மூச்செலாம் திரண்ட அச்சுறுத்துத் தொலியால் கொல்கருவி ஏந்திவரும் கைகளோ தாக்க—விரட்டுவார்முன்-மறு-கையுள் கைம்மகவையும் இடுக்கிக்கொண்டு இருகைக்கும் விஞ்சிய மானத்தை [கற்பை] கவ்விக் கொண்டும் ஓட, கையிலாப் போழ்தோ —அஃது பகைவர் கைப் பட்டுவிடுமோ வென அஞ்சி இலங்கை மண்ணிலே கடுப்புயலாக விரைந்தோடித் தப்பிக்குங்கால் பழைய (புராணக்) கதைகள பறை சாற்றிடுவது போன்ற அரக்கரின் கையிற் சிக்கிச் சாகடிக்கட்படுவமோ வென நடுங்க; அவ்வரக்கர் தமிழர் கண் முன்னையே பலர்தம் வீடு, வணிக, தொழிலகச்செல்வங்களைத் தீயிட்டுக் கொளுத்த அவை புகைவிட்டு விண்முட்ட எரிந்து கொண்டு இருக்கும் அவ்வச்சத் தீப் பிழம்பிலே அவர்தம் உற்றார் உறவின-ரையும் தம் கண்ணெதிரிலேயே தாக்கி அத்தீயிலே உயிருடன் உட-லைச் சிதைத்தும் பிய்த்தும் எறிந்திடுவார் கொடுஞ்செயலால் அவ் வுயிர் உடலினின்று பிரிய எப்படியெப்படி யெலாம் தாங்கொண வேதனையுறும்! எண்ணிறந்த தமிழ்ப் பெண்ணினத்தார் தம் கற்பு பறிக்கப்படும் பொழுதோ கதறக் கதறப் பின் உடலையும் சிதைத்து உயிரையும் பறிக்கும் பொழுதோ அவ் வவலத் துயர் கண்ட பகை ஞரோ அடைவது மிகுந்த வஞ்சின மகிழ்ச்சியாமோ! செத்தபின் தெளிப்பன எள் நீர் என்பர்; எனின் தமிழர்தம் குருதியோ இலங்-கைமண் எங்ஙணும், தாம் சாமுன் தம்குருதியே எள் நீராய் சிந்திக் கிடக்க, கொலைபட்டு மண்ணில் வைக்கப்படா முன்னரே வெந்தும் வேகாக் கொள்ளிகளோ வென சாம்பலும் எலும்புகளுமாக எங்கும் எண்ணிறந்தவாறு சிதறிக் கடக்க-சிங்களத்தே மக்கள் அடைக்கலம் புகுந்த மந்தை யகங்களோ, விலங்கடையும் கொட்டடைகளாக மாற்-றின்றி தாம் கட்டிய ஆடையுடனே பொறுக்கவியலா பசியினாற் சுருங்கச் சுருங்கும் ஒட்டிய வயிற்றுடனேயும் சுமக்கவியலாத் துக-கத்துடனே எஞ்சிய இந்த உயிர்க்கும் எப்பொழுது என்ன ஆகுமோ வென குற்றுயிராய் குலைநடுங்கி - நிற்கவும் இடனின்றி நின்றே நொந்து கொண்டிருக்க நோய்வாய்ப்பட்டு இயல்பான இறப்பைத் தழுவின பின் சடலத்திற் குரியதான எட்டடிப் புதைநிலம் என்பர் அதுவோ ஈழய்!

அழகிய வளையல்களை அணிந்திருந்தவளே, பெரும் புதரில் வாழும் புலிகளின் வாயில் சிக்கிக்கொண்டிருந்த கிளியைப் போன்-றனையே! நின் உற்றார் உறவினர் அனைவரும் தப்பிஓட, இடையிலேயே கொலையுண்டனரோ! அக்கால் அச்சச் சுழலை விடுத்துத் தன் கைம்மகவுடன் தன்னைத் தனியளாய் விட்டுப் பிரிந்தவனுமான தன்னுடைய கணவனிடத்தே அன்புரிமை கொண்ட நன்மனையாளே! ஈழஇனக்கலகம் மூளாதிருந்த நன்னிலையுந்தன் அந்நாளைய மின்-னும் மயில்தோகை வனப்பு விளங்கின உன்மேனியின் கண்ணே இனி எந்த நாளேனும் அவ்வெழில் நலம் வந்திடுமோ! வாராவிடி-னும் இவ்வாறு நலிந்த நின்குழந்தையோ வாயிட்டருந்தியும் பாலற்றழ அத்தகரபொய்ம் மார்பு கொண்டு வருந்துங்கால் செவிதுருவ. கண்நோக்க, வாய் உங்க [அருந்த] நுகர்மூச, [தாய்ப்பாலை நுகர்ந்தபடி] கால்-மெய் ஆட, மார்பற்றி தாய்பற்றி—இன்னபடி பால் அருந்தும் மகவை—மேலும் மேலும் ஈரந்திட இன்பொடு நோக்-கினவளான நின், கடந்த அண்மைக்காலத் துய்ப்பின் கிளர்ந்தெழு மட்டிலா அவ்வின்புகள் இனி வருமோ என்றனை? உன் தாய்த்திரு தமிழ்நாட்டிலே இடைவிடா உணர்ச்சிப் பெருக்குகள் உன்னிலும் மிகுதியாகப் பொங்கக் கண்டோ இலங்கையிலிருந்து இந்தியாற்குக் கதியிலி [அகதி] யாகக் கப்பலில் வந்து இறங்க, இக்கால் உன்-னுடைய தாங்கொணாக் கலக்கத்தை இத் தமிழகத்தே நேரிற்சிந்தி உணர்த்தின பின்றையேனும் அவ்விலங்கைத் தமிழர்பால். இந்நா-டாற்றும் செயற்பலன் வெற்றிகளை அம்மையே, கிடைக்கப் பெறு-வமோ? (என்றவாறு)

இறைவன் ஆற்றல்

ஓடிவரும் தேரின் உருள்கின்ற சக்கரத்தை
நாடி நீர் சென்று நடுவில் தடுக்காதீர்!

அவனுடைய சக்கரத்தால் அண்டம் சுழல்கிறது!
எவருமவன் தேரை எதிர்த்து நிற்காதீர்!

சாரதியை வீண்குற்றம் சாட்டி நீர் பேசாதீர்!
சாரதியோ எந்தத் தவறும் புரியவில்லை!

தேரதனில் உள்ள திருமால் புகலாமல்
பாரிதனில் யாரொன்றும் பண்ண இயலாதே!

—ராமகிருஷ்ணர் அமுதமொழிகள்

பொது அறிவு - வினா-விடை

-திரையன் பி.எஸ்.சி

உலகத்தின் முக்கியமான மதங்கள் யாவை?

இந்து.புத்தம், முகமதியம், யூதமதம், கிறிஸ்தவம், ஷின்டோ-மதம் ஆகியவை உலகின் பழம்பெரு மதங்களாகும். அநாதி காலந்தொட்டு மக்கள் இந்தியாவில் பின்பற்றி வருவது இந்து-மதம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவில் தோன்றி-யதே புத்தமதமாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் அராபிய நாட்டில் முகமது நபியால் தோற்றுவிக்கப்பட்டதே முகமதியம். ஒரே கடவுள் என்ற கொள்கையினைக் கொண்ட யூதர்களின் மதம் ஆதியில் பாலஸ்தீனத்தில் தோன்றியது. ஷின்டோ என்பது ஜப்பானியர்களின் பழம் பெரும் மதம் ஆகும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய கிறித்தவம் ஏறத்தாழ உலக முழுவதும் பரவியுள்ளது.

உப்புக்கடல் எங்கே இருக்கிறது?

கடல் நீரே உப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் அவற்-றுள்ளும் மிக அதிகமாக உப்பு நீரைக் கொண்ட கடல் உப்புக்-கடல். இதனை இறந்த கடல் என்றும் அழைக்கிறார்கள். ஜோர்-டானுக்கும், இஸ்ரேலுக்கும இடையில் 48 மைல் நீளமும் 56மைல் அகலமும் உள்ள பகுதியே இறந்த கடல். இங்கு உள்ள உப்பு மற்ற கடல்களில் இருக்கும் உப்பைவிட ஆறு பங்கு அதிகம். இந்த மிகச்சிறிய கடல் ஏரி போல தேங்கி உள்ளதனால் இதனுள் மிக அதிக அளவில் பொட்டாசியம். உப்பு. மெக்னீசியம் குளோரைடு, புரோமின், கால்சியம் குளோரைடு, ஆகிய தாதுப்பொருள்கள் அடங்-கியுள்ளன. இதில் கரைந்திருக்கும் பொட்டாசியத்தை வைத்து செயற்கை உரம் தயாரிக்கலாம். எந்தவிதமான உயிர்ப் பொருள்-களும் இந்நீரில் வளர முடிவதில்லை. ஜோர்டான் நதி இந்த உப்-புக்கடலில் கலக்கிறது.அந்த நதியில் வரும் மீன்கள் இக்கடலுக்குள் வந்தவுடன் செத்து மிதக்கின்றன. பற்பல கடற்பறவைகளுக்கும் அவை இரையாகின்றன.

உலகத்தின் மிகச்சிறிய நாடு எது?

உலகத்தின் மிகச் சிறிய நாடு வாடிகன் நகரமாகும். ரோம் நகரத்தின் மத்தியில் இந்த மிகச் சிறிய நாடு அமைந்துள்ளது

கத்தோலிக்கர்களின் தலைமைக்குருவான போப் இங்கு தான் வசிக்கிறார். வாடிகன் நகரத்திற்கென்று தனிக்கொடி, அஞ்சல்நிலையம் ரூபாய் நோட்டுகள் ஆகியவை தனியே உண்டு. அதற்கென்று ஒரு வானொலி நிலையமும் உண்டு. உலகம் முழுவதும் இருக்கின்ற கத்தோலிக்கர்கள் இதற்கு நன்கொடையாகவும், உதவியாகவும் பொருள் அளிக்கிறார்கள். இங்குள்ள வாடிகன் அரண்மனையில் போப் வசிக்கிறார். இங்கு ஒரு மிகப்பெரிய நூல் நிலையம் இருக்கிறது. 1870 ஆம் ஆண்டுக்கு முன்னால் இத்தாலி நாட்டின் பல பகுதிகள் வாடிகனின் அதிகாரத்தில் இருந்தன. இப்போது அந்த பகுதிகளெல்லாம் இத்தாலி நாட்டோடு சேர்ந்து விட்டன 1929 ஆம் ஆண்டிலிருந்து இத்தாலி அரசாங்கத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி வாடிகன் நகரம் தனி அரசாக இயங்கி வருகிறது

(4) உன்னையே அறிந்து கொள் என்று சொல்லிய தத்துவஞானி யார்?

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் ஏதென்ஸ் நகரத்தில் வாழ்ந்த கிரேக்கப் பேரறிஞர் சாக்ரடீஸ். தன்னுடன் பேச வருகின்ற யாரையும் கேள்விகளைக் கேட்டே தன் வயப்படுத்தி கருத்துகளை விளக்கிச் சொல்லும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார். மூட நம்பிக்கைகளில் மலிந்திருந்த கிரேக்கநாடு சாக்ரடீசை வெறுத்து ஒதுக்கியது. இளைஞர்களைக் கெடுக்கிறார் என்றும் மதச் சடங்குகள்ளை ஒதுக்குகிறார் என்றும் குற்றம் சாற்றப்பட்டு ஏதென்ஸ் நகர நீதி மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டார். அக்கால வழக்கப்படி இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. இவருக்குக் கொடுத்த நச்சுக் கோப்பையை எந்தவித சலனமும் இல்லாமல் வாங்கிக் குடித்துவிட்டு புன்னகை தவழ மரணமடைந்தார்.

(5) சுண்டெலிக்கு யானை பயப்படுமா?

யானை பலம் பொருந்திய மிகப் பெரிய மிருகம். சுண்டெலிக்கு யானை பயப்படும் என்பது நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. யானையின் துதிக்கைக்குள் சுண்டெலி புகுந்து யானையை மூச்சுத் திணறச் செய்துவிடும் என்று பலர் நம்புகிறார்கள். உண்மை அதுவல்ல; சுண்டெலிக்கு யானை அஞ்சுவது இல்லை. சில சமயங்களில் யானை-

யைச் சுற்றிச்சுற்றி சுண்டெலி ஓடுவதை பார்க்கலாம். யானைக்கு மிக நுண்ணிய மோப்ப சக்தி உண்டு. சுண்டெலி ஓடுவது அதற்கு தெரியாமல்இல்லை. யானை அதைப்பற்றி கவலைப்படுவதே இல்லை. என்பது உண்மை. நாம் நினைப்பதுபோல் துதிக்கைக்குள் நுழைந்-தாலும் யானை ஒரே ஊதில் ஊதிவிடும். சுண்டெலிக்கு யானை அஞ்சுகிறது என்பது உண்மை அல்ல.

(6) புழுபூச்சிகளைச் செடிகள் தின்னுமா?

எல்லாச் செடிகளும் சூரிய ஒளியிலிருந்து கிடைக்கும் ஒளிச் சேர்க்கையினால் தனக்கு வேண்டிய உணவை தயாரித்து கொள்-கின்றன. இதனோடு சில நைட்ரஜன் போன்ற உயிர்ச்சத்துக்களும் அவைகட்குத் தேவை. மண்ணில் இருக்கும் பாக்டீரியாக்களே செடி-களுக்கு நைட்ரஜன் சத்தை கொடுப்பதற்கு காரணமாக உள்ளன. சதுப்பு நிலங்களிலும் காரமான மண்வகை உள்ள இடங்களிலும் பாக்டீரியாக்கள் வாழமுடியாது. செடிகளுக்கு வேண்டிய உயிர்ச்சத்து கிடைக்காவிடில் பசுமையாக இருக்க வேண்டிய செடிகள் வெளிர் நிறமாகவும், பழுப்பு நிறமாகவும் மாறி உதிர்ந்துவிடும். இப்படி நைட்ரஜன் கிடைக்காத இடங்களில் சிற்சில செடிகள் அங்கு வாழும் புழுபூச்சிகளைத் தின்று தங்கட்கு வேண்டிய நைட்ரஜன் பசியைத் தணித்துக் கொள்ளுகின்றன.

புழுபூச்சிகளில் நைட்ரஜன் சத்து நிறைய உண்டு. இப்படி உயிரினங்களை தின்னும் செடிகள் வெப்பக் காடுகளில் உண்டு. ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் குடம் போன்ற அமைப்புடைய Pitcher plant உண்டு. இதிலிருந்து வரும் இனிய வாசனையில் மயங்கி பூச்சிகள் உள்ளே சென்றதும், சுரசுரப்பான உட்பகுதியில் சிக்கி அவை மாண்டு விடும். Venus fly trap, sundew போன்ற செடிகளும் பூச்சி தின்னும் வகையை சார்ந்தவையே.

கம்ப்யூட்டர்களின் பயன் யாது?

கம்ப்யூட்டர் ஒருவகையில் இயந்திரமூளை என்று கூறலாம். தொடக்கத்தில் கூட்டல், கழித்தல் போன்ற பணிகளையே அது செய்தது. கையடக்கமான கூட்டல் இயந்திரங்களை கடைகளிலும், அலுவலகங்களிலும் நாம் பார்க்கிறோம். 1890ஆம் ஆண்டு அமெரிக்-

காவில் மக்கட்தொகை கணக்கிட்டபோதுதான் முதன்முதலாக கம்ப்யூட்டர்களை உபயோகித்தனர். முழுவதும் மின்கருவிகளை கொண்டே இயங்கும் கம்ப்யூட்டர்கள் இப்போது பலநாடுகளில் பயன்படுத்துகின்றனர். கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் ஆகிய அனைத்தையும் செய்வதோடு, நாம் கொடுக்கும் செய்திகளையும் கம்ப்யூட்டர் சேமித்து வைத்துக் கொள்கிறது. தேவையான பொழுது அச்செய்திகளை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம். பல்லாயிரக்கணக்கான செய்திகளையும் அது தன்னுள் அடக்கிக் கொள்ளுகிறது. மின்சாரத்தில் இயங்கும் இக்கம்ப்யூட்டர்களை ஒரு மாபெரும் சக்தி எனலாம். நூற்றுக்கணக்கான நாட்களிலும் மாதங்களிலும் போடக்கூடிய சிக்கலான கணக்குகளை வெகு விரைவில் போட்டுக் கொடுத்துவிடும் அசாதாரணமான சக்தி கம்ப்யூட்டருக்கு உண்டு.

ஆனால் கம்ப்யூட்டரிடமிருந்து வேலை வாங்குவதற்கு முன்னர் நாம் அதற்கு முறையாகவும், சரியாகவும், குறித்த காலத்திலும் செய்தி கொடுக்க வேண்டும். இச்செய்திகளின் அடிப்படையில் நாம் என்ன செய்யச் சொல்லுகிறோமோ அதனை மட்டும் செய்து கொடுக்கும் திறமை இந்த இயந்திரமூளைக்கு உண்டு. தானாகச் சிறிதும் செயல்படாது. இதுதான் மனிதமூளைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆயினும் செய்திகளை சேமித்து வைத்து கொள்வதனாலும் குறிப்பிட்ட பணிகளை விரைவில் செய்து தருவதனாலும் கம்ப்யூட்டர்களை விஞ்ஞான ஆய்வுக் கூடங்களிலும், வங்கிகளிலும், வணிக நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்கா, பிரான்சு போன்ற வெளிநாடுகளில் பரவலாக கம்ப்யூட்டர்கள் உபயோகத்தில் உள்ளன.

கைத்திறச் சிந்திரங்கள்
கணிதங்கள் வான நூற்கள்
மெய்த்திற நூற்கள், சிற்பம்
விஞ்ஞானம், காவியங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமையென்னப்
புத்தகசாலை எங்கும்
புதுக்குநாள் எந்தநாளோ?

— பாரதிதாசன்

சீறாப் புராணமும் கீர்த்தனையும் — ஒப்பியலாய்வு

—எஸ்.எம்.ஏ. காதர், பி.ஏ.பி.எட்
தமிழாசிரியர்,
விருதுநகர்.

1) சீறா—சொல் விளக்கம்

சீறா என்பதற்குப் 'புகழ் சான்ற வரலாறு' என்று பொருள். இஸ்லாம் சமயப் பெரியராகிய முகம்மது நபியின் புகழ்மிகு வரலாற்றைக் கூறும் காவியங்களே சீறாப் புராணமும் சீறாக் கீர்த்தனையும் ஆகும்.

சீறா என்னும் சொல், சீறதி என்ற அரபுச் சொல்லடியாகப் பிறந்தது.

> அஆ வ என வருஉம் இறுதி
> அப்பால் மூன்றே பலவற்றுள் படர்க்கை

என்பது தொல்காப்பியம். எனவே சீறத் என்ற அரபுச் சொல்லில் 'சீற்' முதலாக நின்று 'ஆ' வென்னும் விகுதியுடன் புணர்ந்து சீறா ஆயிற்று.

சீறத் என்ற அரபுச் சொல்லுக்கு 'புகழ் சான்ற' என்பது பொருள்.

2) ஆசிரியர் குறிப்பு

சீறாப் புராணத்தின் ஆசிரியர் உமறுப்புலவர், இவர் கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் பயின்று எட்டயபுர மன்னனின் அவைக்களப் புலவராக இருந்தார். செத்தும் கொடை கொடுத்த வள்ளல் சீதக்காதியால் இவர் ஆதரிக்கப்பட்டார் என்பர்.

சீறாக் கீர்த்தனையின் ஆசிரியர் செய்யது அபுபக்கர் ஆவார். இவர் கோட்டாறு என்னும் ஊரினர். பூவாற்றூர் என்ற ஊரின் வள்ளல் செய்யது முகம்மது என்பாரால் ஆதரிக்கப்பட்டார். இவை இக்கீர்த்தனையில் கண்ட சான்றுகளே தவிர வேறு புறச்சான்று ஏதும் கிடைத்தில,

3) அமைப்பியல்

சீறாப் புராணத்துள் உமறுப்புலவர் முகம்மது நபியின் வரலாறு முழுவதும் பாடவில்லை.

விலாதத் காண்டம், நுபுவத் காண்டம் உறிஜிரத் காண்டம் என்று சீறாப் புராணத்தை மூன்று காண்டங்களாக வகுத்துக் கொண்டு 92 படலங்களும் 5027 விருத்தப் பாக்களுமாகக் காப்பியத்தை முடித்தார்.

சீறாப் புராணத்தை முதல் நூலாகக் கொண்டு பிறந்த சார்பு நூலே சீறா கீர்த்தனை. இதில் காண்டங்களும் படலங்களும் பெயரும் வைப்பு முறையும் மாறாமல் அமைந்திருக்கின்றன; என்றாலும் வேறுபாடுகள் இலாமல் இல்லை.

சீறாப் புராணம் விலாதத் காண்டத்தில் காணும் முதல் இரு படலங்கள் (நாட்டு வாழ்த்து, நகர வாழ்த்து) கீர்த்தனையில் இல்லை. நபியின் நாட்டுடன் நகரத்துடன் அவை முரண்படுவதால் கீர்த்தனை ஆசிரியர் அவற்றை விடுத்தார் போலும்.

சீறாப் புராணத்தில் முதல் காண்டம் 24 படலங்களைக் கொண்டது. கீர்த்தனையில் 22 படலங்கள் இருக்கின்றன.

இரண்டாவது காண்டமான நுபுவத் காண்டத்தில் இவ்விரு புலவர்களுக்கும் வேறுபாடில்லை. இரு நூல்களிலும் 21 படலங்களே அமைந்திருக்கின்றன.

மூன்றாவது காண்டமான உறிஜிரத் காண்டம் சீறாப் புராணத்தில் 47 படலங்களைக் கொண்டிருக்க கீர்த்தனை 20 படலங்களுடன் முடிந்து விடுகிறது. புராணத்தில் காணும் படலங்கள் வரிசை முறை மாறாமல் இம்மூன்றாம் காண்டத்தில் அமைத்து 20 படலங்களுடன் முடித்துக் கொள்கிறார். (அதாவது கீர்த்தனையில் காணும் இறுதிப் படலமான ''பதுறுப்படைப் படலம்'' சீறாப் புராணத்தில் 20ஆவது படலமாக இருக்கிறது. இவ்விருபதாம் படலத்திற்குப் பின் அமைந்த 27 படலங்கள் சீறா கீர்த்தனையில் இல்லை.)

முதற்காண்டம் 22 படலமும் இரண்டாம் காண்டம் 21 படலமும் மூன்றாம் காண்டம் 20 படலமுமாக அமையும் எண் முறை அழகு விரும்பியே கீர்த்தனையார், மூன்றாம் காண்டத்தின் பிற்படலங்களை விடுத்தார் என்பர். ஆனால் அது பொறுத்தமுடையதன்று.

இக்காண்டத்தின் பெயர் ஹிஜிரத்காண்டம் என்பதும் இறுதிப் படலம் பதுறுப் படலம் என்பதும் கொண்டு நோக்கினால் உண்மை புலனாகும்.

ஹிஜிரத் என்பதற்கு விட்டுச் செல்லல் என்று பொருள். நபிநாயகத்தின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாத மெக்கா நகர மக்கள் 'ஹிஜிரத்' செய்ய வைக்கின்றனர். மெக்கா நகரைவிட்டுப் புறப்பட்ட முகம்மது மதீனாவை அடைகிறார். மதீனா இவரை வரவேற்கிறது. திண்திறல் வீரர் 313 பேர்களுடன் திரும்புகிறார். மதீனாவிற்கு தென்மேற்கில் 85 மைல் தொலைவில் அமைந்த பதுறு என்ற இடத்தில் போர் மூள்கிறது. இப்போர் நிகழ்ச்சி நபியின் வாழ்வில் ஓர் இன்றியமையாததாகும். ஊர்விட்டுச் சென்ற நபி ஊருக்குள் நுழையும் நிகழ்ச்சி இதுவாகும். முகம்மது வென்றால் இஸ்லாம் வாழும்—வீழ்ந்தால் இஸ்லாமிய சமயம் தலைதூக்க முடியாது. அந்நிலையில் வந்த முகம்மது வென்று வாகை சூடுகிறார்.

அராபிய வரலாறு படைத்த பிலிப்.கே. ஹிட்டி என்பார் முகம்மது 300 வீரர்களுடன் திரும்பினார் என்றும், இவ்வெற்றி என்றும் ஒரு சிறிய மாநில மதமாக இருந்த இஸ்லாம் இன்னொரு மாநிலத்தில் கால் கொண்ட நிகழ்ச்சியே பதுறுப்படை என்றும் கூறுவர்.

எனவே ஹிஜிரத்தின் பொருண்மை பதுறுப்படையுடன் முடிந்து விடுகிறது. இப்படலத்திற்குப் பின் உமறு பாடியிருக்கும் படலங்கள் காண்டத்தின் பெயர்ப் பொருத்தத்துடன் ஒன்றாதின ஆதலால் கீர்த்தனையார் அவற்றை விடுத்தார் எனத் துணியலாம்.

சீறாக்கீர்த்தனை 565 விருத்தப் பார்க்களும் 293 பதங்களும் கொண்டது சாரங்கி, யமுத கல்யாணி, பரசு, மோடி முதலிய வட இசையிலும் சங்கராபரணம், தோடி, கல்யாணி, காவேரி, ஆனந்த பைரவி, புன்னாகவராளி, பந்துவராளி, பூபாளம் மோகனம், குறிஞ்சி,

காம்போதி, முகாரி, அட்டாணா, சௌராஷ்டகம், கேதாரகௌளம் அசாவேரி, மத்திமாவதி சுருட்டி, சுத்த சாவேரி செஞ்சுருட்டி பியாகடை, எரிக்கலம் காம்போதி, உசேனி துஜாவந்ததி பிலகரி நாதநாமக்கிரியை சுகாதா சாவேரி முதலிய தெலுங்கிசையிலும் பண்பாடுகிறார்.

ஒவ்வொரு பண்களிலும் பதமும் தாளமும் தருகிறார். பதம் என்பது நாட்டியத்திற்கு அமைந்த பாடல் ஆசிரியர் பதம் எனப் பெய்து ராகமும் துறை மடக்கும் தந்திருப்பது இன்றைய சொற்களோடு வேறுபடுகின்றன.

துறை மடக்கு என்பது அகத்திணைக்குரிய பாடல்களாகும். இராகம் என்பது தெலுங்கிசையோடு தொடர்புடையன. எனவே பதம் ராகம் துறை மடக்கு எனக் கொடுத்திருக்கும் குறிப்பு ஆய்வுக்குரியது.

தாள வகையில் ரூபக தாளம், ஆதிதாளம், திரிபுடைய தாளம், அடதாள சாப்பு என்பனவற்றால் பண்ணிசைக்கிறார்.

நந்தனார் சரித்திர கீர்த்தனையில் கோபாலகிருட்டிண பாரதி' யவர்கள், 'மாடு தின்னும் புலையா-உனக்கு மார்கழித் திருநாளோ-என புதியமெட்டு அமைத்தது போலவே சீறாகீர்த்தனை பாடிய செய்யது அபுபக்கர் அவர்கள் 'வேறுமெட்டு' என்று தலைப்பிட்டு 31 பண்களை இசைத்திருக்கிறார்.

4. ஒப்பியலாய்வு

சீறாப்புராணமும் சீறாக்கீர்த்தனையும், காண்டம், படலம் அமைப்பில் ஒன்று பட்டுக் காணப்படுவது போலவே பிற ஒத்த தன்மைகளைப் பற்றி காண்போம்.

சீறாப் புராணத்தாரும் கீர்த்தனையாரும், அவையடக்கம் பாடுகின்றனர். உமறு செல்வச் செருக்கு மிக்குச் செங்கோலோச்சும் மன்னன் முன் அன்றைய உணவுக்கு வழியில்லாத சூலியாளன் ஒப்பென்றால் முந்திய செல்வ மன்னர்கட்கு செந்தமிழ்ப்புலவர்களையும ஏழையாளனையும் உவமையாக்கிக் கூறுவர்.

அடுத்த பாடலிலும் உமறு கூறுவது சிந்திக்கத்தக்கது. மலை எல்லாம் கடலகத்து எடுத்து வீசிய சூறைக் காற்று அனைய பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல் திறம். அவர் முன் தாம் பாடுவ சண்டமாருதத்தின் முன் வறுமையால் மெலிந்து வருந்திய சிற்றெறும் விட்ட ஒரு மூச்சுப் போன்றது என்பதே அது.

கீர்த்தனை பாடிய செய்யது அபுபக்கர்,
மன்னூதிடர் மாமலைஎதிர் மன்திடர் வரும்போல்
கொன்று பேரலை கடலெதிர் நீருங் குழிபோல்
மின்னொதிர் மின்மினி பறப்பன வியன்போல்
பன்னுசெந் தமிழ்ப்புலவர் முன்சொலும் சீறாப் பதமே!

என்பர்.

ஒத்த வருணனைகள் இவ்விரு காவியங்களிலும் மிகுதியாக காணப்படுகின்றன. சான்றுக்கு ஒன்று காண்போம்.

திருமண நாள்! காவிய நாயகர் முகம்மது நபி நஞ்ச மாட்டப்படுகிறார். சிற்பரியற்றிய பலகையின் நடுவிருந்து நீராடி முகம்மதை - சீறாப்புராணம்.

அற்புதமாம் விண்ணவரும் புகலரிய ஆபுசம்சத்
தரிய நீரை
பொற்குடத்தி லெடுத்தமுதக் கதிரென மலைமிசையே
பொழுவ போல
சிற்பரியற் றியபலகை நடுவிருத்தி முகம்மதுதம்
சிரசின் மீதே
சொற்பழுத்த மறைமுதியோர் மங்கலவாக் கியங்கிரங்க
சொறிந்தா ரன்றே

என்கிறது. சீறாக்கீர்த்தனை, பின்வருமாறு கூறுகின்றது :

தருணத்தின் சிறப்பியற் பின்னர் ஆப
சம்சத்தின் நறும்புனல்பொற் குடத்தெடுத்து
இருமணம்மெல் முகம்மதைவுன் பிற்பு கழ்ந்து
இரத்தினமணி பலகைநடு வினில்இ ருத்தி

வருமன வே தியர்சூழ சிரசின் மீதே
மங்கலவாக் கியங்கறங்க சொரிநீ ராட்டி
திருமணநீர் புலர்த்திநறை வாசஞ் செய்து
சேர்த்தினார்துகில் அறையில் சாத்தி னாரே!

நன்றிக்கடன்

புலவர்கள் தம்மை ஆதரித்த வள்ளலை காப்பியத்துள் காட்டுதல் மரபு. அம்மரபிற்கேற்ப புராணத்தாரும் கீர்த்தனையாரும் தம் கடப்பாட்டைக் காட்டுகின்றனர்.

உமறுப் புலவர் தம்மை ஆதரித்த வள்ளல் சீதக்காதி என்பது அறியப்படும் செய்தியாகும். ஆனால் அப்பெயரை தன் நூலில் குறித்தாரில்லை. மாறாக அபுல்காசிம் என்ற வள்ளல் பெயரையே பாடிச் செல்கிறார்.

வரியளி யலம்பும் புயனபுல் காசிம்
மனத்துறை வரிசை நயினார்
தெரிமலர் கதீஜா நாயகி நயினார்
செல்வமுற் றினிதி ருந்தார்

என்கிறார்.

சீறாக் கீர்த்தனையாரும் ஏறத்தாழ இதே பொருளில் தன் நன்றிக் கடனைக் காட்டுகிறார்.

மந்தரத்தின் புயன்பூவாற் றார்க்கு வாய்ந்த
மன்னவனாம் போக்குமே சேந்திரன் ஈன்ற
சுந்தரனாம் செய்யதுமுகம் மதுசீ னுவைச்
சுரராகப் பதப்பனுவல் செய்வதற்குப்
பொன்தரலாம் கனமகிழ்ந்து செம்பொன் நல்கிப்
பொருள்நபி மேற் பேரன்பு வைத்தாப் போல
அந்தரம்பேரய் வரும் நபிமேல் கதீஜா பேரன்
பாகினார்மொ ழிமதுரைப் பாகினாரே

என்கிறார்.

5. சொல்லாட்சி

சீறாப் புராணத்தில் காணும் சொல்லாட்சி பண்டித நடை; சீறாக்கீர்த்தனை பாமர நடை; கோபாலகிருட்டிண பாரதி, மாயூரம் வேதநாயகம் ஆகியோர் நடையுடன் ஒப்பிடத் தக்கன.

மலர்தலை உலகமும் மடவியும் எங்கும்

என்ற பழந்தமிழ் இலக்கியத் தொடரும் இவுளி, இந்து முதலான செந்தமிழ்ச் சொற்களும் சீறாக் கீர்த்தனையில் காண்கிறோம்.

பத்திரம் கொண்டு போனான்—தூதன்
பத்திரம் கொண்டு போனான்

என்கின்ற கீர்த்தனையார், பத்திரம் என்ற வடசொல்லையும், பிரபு ரொக்கம். சரக்கு முதலான பிற்காலப் பேச்சுத் தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்துகிறார். ஜல்தி என்ற உருதுமொழிச் சொல் மொழியிலார் கூறும் 'வேறினமாதல்' வகையில் சடுதி எனக் காண்கிறோம்.

அரவின் வாய்த் தேரை, குஞ்சரத்தை எலி மாய்க்குமோ, சூரியன்முன் பனிபோல், ஈயும் தேனும் போல முதலான உவமைகள் பரவலாகக் காணப்படுகின்றன.

6, காலம்

சீறாப்புராணம் நூல் பிறந்த காலத்தைச் சொல்லவில்லை. உமறுவின் காலமான 1645-1705க்கும் இடைபட்ட காலமே சீறாப்புராணத்தின் காலம் என்பர். கீர்த்தனையில்

அன்பான சகாத்தம் ஓ ராயி ரத்து
அறுநா ற்று முப்பத்து மூன்றினாக
பின்பான கொல்லந்தொள் ளாயிரத்து
பெரு கென்பத் தேழாமாண் டாடிதன்னில்
இன்பான நபிகிசுரத் தாயிரத்தி
இருநா ற்றி இருபத்தே ழிரஜப் மாதம்
துன்பான தகழேலாந் தெய்தி வாரஞ்
சோமனிராப் பதம்துடக்கிச் சொல்லலுற்றான்

என்று சக ஆண்டும் கொல்லம் ஆண்டும் உறிஜீரியாண்டும் தெளிவாகக் குறிக்கப்படுகிறது. உரிஜீரி 1237க்கு நிகரான கிறித்துவாண்டு கி பி.1812 ஆம் ஆண்டாகும்.

7. முடிவுரை

இவ்வொப்பியல் ஆய்வில் ஒரு சிறிதே கண்டவாறு, நூல் முழுதும் துய்த்து இருபெரு நாகரிகங்களின் சங்கமத்தை கண்டுகளிப்போம்.

இறைவழிபாடு பற்றி நாட்டாரும் திரு.வி.க வும்

"திண்டுக்கல்லுக்கும் பழனிக்கும் இடையில் ஒட்டன்சத்திரம் இருக்கிறது அங்கே நாவலூற்றுச் சன்மார்க்க சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா (1927) நடைபெற்றது. அதிலே ந.மு.வே. நாட்டாரும் யானும் வாய்த் தொண்டாற்றிப் பழனி நோக்கினோம். வழியில் நாட்டார் ஐயா, 'நீங்கள் சுயமரியாதை இயக்கத்தின் சில கொள்கைகளை மறுக்கப் புகுந்தது மகிழ்ச்சியூட்டுகிறது அக் கொள்கைகளுக்கு விதை விதைத்தவர் நீங்களல்லவோ? சீர்திருத்தம் என்ற பெயரால் கோயில்களின் நடைமுறைகளில் சிலவற்றை வன்மையாக நீங்கள் மறுக்கப் புகுந்ததே விதையாயிற்று. நீங்கள் ஒருவிதக் கருத்துக் கொண்டு ஆபாசங்களை மறுக்கிறீர்கள். அம்மறுப்பை இராமசாமி நாயக்கர் கேட்டுக் கேட்டு அதைத் திரித்துத் திரித்து வேறுவிதமாகப் பயன்படுத்துகிறார். போனது போக இனியாவது கோயிலைக் குறை கூறாதிருங்கள்' என்று தண்மையும் வெம்மையும் கலந்த ஒலியில் உரைத்தது என் உள்ளத்தை உறுத்தியது. பழனியில் நாட்டார் திருமுருகாற்றுப் படை ஓதி ஆண்டவனை வழிபட்டது உள்ளத்தை உருக்கியது."

—திரு.வி.க, வாழ்க்கைக்குறிப்புகள்

ஆற்றலும் ஆக்கமும்†

டாக்டர் C. E. சூரியமூர்த்தி, Ph.D.,

ஆற்றல் துறை, மதுரைப் பல்கலைக்கழகம்,

மதுரை 625021

ஒரு கருவியின் ஆற்றல் என்பது அது செய்யக்கூடிய பணியின் அளவாகும். நமது இன்றைய உலக வாழ்க்கை இந்த ஆற்றல் என்ற அச்சைச் சுற்றியே சுழல்கிறது. உணவைச் சமைக்க வெப்ப ஆற்றல் தேவை. பிரயாணம் செய்ய இயந்திர ஆற்றல் தேவை. மின்னாற்றல்கொண்டு மின்விளக்கு, மின்விசிறி நீரேற்றி, வானொலிப் பெட்டி முதலியவைகளை இயக்குகிறோம். மனித வாழ்க்கையின் தரம் உயர, உயர ஆற்றலின் தேவையும் அதிகரிக்கிறது. பொருளாதார நிபுணர்களின் கணிப்புப்படி ஒரு நாட்டின் சராசரி மனிதனின் வருமானம் அவனுக்குக் கிடைக்கும் சராசரி ஆற்றல் அளவைப் பொருத்ததாகும். உதாரணமாக, ஒரு அமெரிககரின் வருமானம் ஆண்டுக்கு சுமார் 45,000 ரூபாயாகும். அவனுக்குக் கிடைக்கும் ஆற்றலின் சராசரி அளவு சுமார் 6000 வாட் ஆகும். ஒரு இந்தியரின் வருமானம் சுமார் ஆண்டுக்கு ரூபாய் 1000 ஆகும். அவருக்குக் கிடைக்கும் ஆற்றலோ சுமார் 200 வாட் ஆகும். ஆக, ஒரு நாட்டின் ஆக்கத்தைப் பெருக்க அந்த நாட்டின் ஆற்றல் வளத்தைக் கூட்டவேண்டும்.

நம்முடைய ஆற்றல் தேவைகளை இந்நாள் வரை விறகு, பெட்ரோலிய எண்ணெய், கரி, நீர் மின்சாரம், வெப்ப மின்சாரம் முதலியவைகள் பூர்த்தி செய்தன. போக்குவரத்து சாதனங்களுக்காக, நாம் உபயோகிக்கும் பெட்ரோலிய எண்ணெய் அளவில் நான்கில் ஒரு பங்கு சென்றது ஆனால், 1973ல் ஏற்பட்ட ''ஆற்றல் நெருக்கடியில்'' (energy crisis) பெட்ரோலிய எண்ணெய் விலைகள் பலமடங்கு உயர்ந்தன. நம் நாட்டுப் பொருளாதாரம் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இன்று சுமார் ஆண்டுக்கு 5000 கோடி ரூபாய் பெறுமான பெட்ரோலிய எண்ணெய் விலைகள் பல மடங்கு உயர்ந்தன. நம் நாட்டுப் பொருளாதாரம் இதனால் வெகுவாகப் பாதிக்கப் பட்டது. இன்று சுமார் ஆண்டுக்கு 5000 கோடி ரூபாய் பெறுமான பெட்ரோலிய எண்ணெய்களை இறக்குமதி செய்கிறோம். இந்தச்

---

†சென்னை பல்கலைக் கழகத்தினரிடம் முதல் பரிசு பெற்றது. (Given First Prize by University of Madras, for Tamil Articles)

செலவில் பல பொருளாதார முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன. இதற்குமேல் நாம் எண்ணைக்காக செலவு செய்ய முடியாது. மேலும் விறகிற்காக காடுகளை விரைவாக அழித்து வருகிறோம். இதனால் மலைகளில் மண் சரிவும், பருவமழை குறைதலும் ஏற்படுவது நாம் இன்று காண்பவைகள் ஆகும். மதுரை போன்ற நகரங்களுக்கு நாள் ஒன்றுக்கு 700 டன் விறகு தேவைப்படுகிறது. இது சுமார் 1500 மரங்களுக்குச் சமம். இந்த வேகத்தில் மரங்களை வெட்டினால் நாம் பாலைவனத்தைதான் வரவேற்போம். மேலூம், எண்ணை. விறகு போன்றவைகள் எரிந்து, காற்றை அசுத்தப்படுத்துகின்றன. காற்றில் கரியமில வாயுவின் அளவுகூட, உலக சராசரி வெப்பம் கூடுகிறது. இதனால் பல தீயவிளைவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எண்ணை வளமும் இன்னும் 50 ஆண்டுகளில் வற்றிவிடும். இந்த சூழ்நிலையில், பெருகும் மக்கள் தொகைக்கு வேண்டிய ஆற்றலை எங்கிருந்து பெறுவது என்ற கேள்வி எழுகின்றது. நீர்மின்சாரம் பருவ நிலையைப் பொறுத்து இருப்பதால் அதன் அளவைக் கூட்டமுடியாது. அனல் மின்சாரம் கரி கிடைக்கும் இடத்தில்தான் லாபகரமாக கிடைக்கும். கரியும் 100 ஆண்டுகளில் குறைந்துவிடும். அணு மின்சாரம் அமைக்க ஆகும் செலவு மிக அதிகம். அதற்கு வேண்டிய கதிர்வீச்சுப் பொருட்கள் எளிதாகக் கிடைப்பதில்லை. அதில் பல அரசியல் குழப்பங்கள் இருந்து தடைசெய்கின்றன.

இந்த நிலைகளில் அதிகப்படியான ஆற்றலை எளிதாக வேண்டும் அளவுக்குப் பெற விஞ்ஞானிகள் ஆர்வம் கொண்டு ஆராயத் தொடங்கினர். அதிர்ஷ்ட வசமாக நமக்கு வேண்டிய ஆற்றல் நமக்கு அருகிலேயே இருந்தது. அதுதான் நேரடியான சூரிய ஆற்றல் ஆகும். இதுவே நம்மை இன்று காப்பாற்றும் அருமருந்தாகும். எண்ணை, கரி போன்றவைகள் சூரியனிலிருந்தே ஆற்றலைப் பெற்றன. ஆனால் அந்த வடிவம் பெற பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயின. விறகு, எண்ணை, கரி போன்றவைகள் சூரிய ஆற்றலின் தேக்கமே : ஆனால் இவைகள் புதிப்பிக்கப்படும் ஆற்றல் வடிவங்கள் அல்ல.

ஆனால் நேரடி சூரிய ஆற்றல் சுத்தமானது. காற்றை பங்கப்படுத்தாது புதிப்பிக்கப்படும் ஆற்றல் ஆகும். (renweable energy). இந்த சூரிய ஆற்றலை நேரடியாக பயன் படுத்துவதின் மூலம் இன்றைய ஆற்றல் வேட்கையை தீர்க்க வழி தோன்றியுள்ளது.

இதையே மகாகவி பாரதியார், சூரியனை

''சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஒரு குமிழியாம்
சக்திப் பொய்கையிலே ஞாயிறு ஒரு மலராம்''

என்று புகழ்கிறார்.

சூரியனின் ஆற்றல் அணுச்சேர்க்கையால் (nuclear fusion) உண்டாகிறது. இதன் ஆற்றல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு குறை-வில்லாமல் இருக்கும். இங்கு பொருண்மை (mass) ஆற்றலாக மாறுகிறது. சூரிய ஆற்றல் கதிர்வீசல் மூலம் பூமியை அடைகிறது. காற்று மண்டலத்தின் மேல் சூரிய மாறிலியின் (solar constant) மதிப்பு சுமார் 1360 வாட்/சதுரமீட்டர் ஆகும். பூமியின் தரையில் அதன் மதிப்பு தமிழ் நாட்டில் சுமார் 1000வாட்/சதுரமீட்டர் ஆகும். பருவநிலைக் கேற்ப இதன் மதிப்பு 900 வாட்டிலிருந்து 1100 வாட்-வரை மாறுகிறது. இது சதுரமீட்டருக்கு ஒரு குதிரைச் சக்தியை விட அதிகமாகும். இன்றைய உலகின் மொத்த ஆற்றல் தேவை 10^{10} கிலோ வாட் ஆகும். இதைவிட 10,000 மடங்கு சூரிய ஆற்றல் பூமியை அடைகிறது. இதிலிருந்து சூரிய ஆற்றலின் முக்-கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

ஆனால் சூரிய ஆற்றல் தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு சராசரி 8 மணி நேரமே கிடைக்கும். வருடத்திற்கு 300 நாட்களுக்கு குறை-வில்லாமல் கிடைக்கும். சூரிய ஆற்றல் அதிகமாக ஒளி (optical) வடிவில் உள்ளது. சூரிய ஒளியை வெப்ப ஆற்றலாகவும் மின்சார ஆற்றலாகவும் மாற்றினால் அது மிகவும் கவர்ச்சிகரமான ஒன்றாக இருக்கும். இயற்பியல் (physics) விஞ்ஞானிகள் இந்த செயலை தங்கள் ஆராய்ச்சிகளினால் வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

சூரிய ஒளியிலிருந்து வெப்பம் பெறும் தத்துவத்தின் அடிப்-படையை சிறிது விளக்குவோம். ஒரு உயரம் குறைந்த வாய் அகன்ற உலோகப் பாத்திரத்தின் உட்பரப்பை கரிய வர்ணத்தினால் பூசி அதன் வாயை சாதாரண கண்ணாடியால் மூடி விடவேண்டும். பாத்திரத்தின் வெளிப்பக்கத்தை கண்ணாடிக் கம்பளத்தால் (glass wool) போர்த்தி விட வேண்டும். இந்த அமைப்பில் சூரிய ஒளி பட்டால் சூரிய ஒளி ஆற்றல் கண்ணாடி வழியாக உட்சென்று

கரிய வர்ணத்தில் பட்டு வெப்பமாக மாறுகிறது. இந்த வெப்பத்தை வெளிச் செல்லாமல் கண்ணாடிக் கம்பளம் தடுக்கிறது. கண்ணாடி ஒரு அரிதில் சூடுகடத்தி. பக்கவாட்டில் வெப்பம் தப்பாமல் கண்ணாடிக் கம்பளம் பாதுகாக்கிறது. ஆக சூரிய ஆற்றல் மேலும் மேலும் பட உட்பாகம் அதிக வெப்ப நிலையை அடைகிறது. இந்த வெப்பத்தில் சமைக்கலாம். வெந்நீர் தயாரிக்கலாம், நீராவி உண்டாக்கலாம். இதுவே சூரிய அடுப்பு (வெந்நீர் அமைப்பு) ஆகியவற்றின் தத்துவமாகும். இவைகள் உணவகங்கள், விடுதிகள், நூல்தொழிற்சாலைகள், பட்டுநூல் தயாரிக்கும் இடங்கள், மின் முலாம் பூசும் இடங்கள், வீடுகள், ஆகியவற்றில் மிகவும் பயன் படும். இதனால் எரிபொருட்கள் ஏராளமாக மீதம் ஆகும்.

100°cக் குறைவாக தேவைப்படும் வெப்ப நிலையை இந்தக் கருவிகள் கொண்டு எளிதாகப் பெறலாம். அதிக வெப்ப நிலைப் பெற ஒளி குவிப்பான்கள் (concentrators) தேவைப்படும். பிரனல் (frenels) குவி வில்லைகள் இதற்கு பயன்படுகின்றன. இந்த பிரனல் குவிப்பான்கள் பிளாஸ்டிக் தகடுகளாக கிடைக்கின்றன. ஒரு சதுர மீட்டர் கொண்ட பிரனல் தகடுகள் சூரிய ஒளியை குவித்து 300°cக்கு மேற்பட்ட வெப்ப நிலையைக் கொடுக்கும் பல பிரனல் குவிப்பான் களினால் சூரியஉலை அமைக்கமுடியும். இவைகள் உலோகத் தொழிற்சாலைகளுக்கு மிகவும் பயன்படும். சூரிய வெப்பத்தினால் இன்றைய மொத்த ஆற்றல் செலவில் 10 சதவிகிதத்தை நிறை செய்ய முடியும் என்று வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். இது நாட்டிற்கு பெரிதும் உதவும் சேமிப்பாகும்.

சூரிய ஒளியை சிலிக்கான் வில்லைகள் (silicon cells) கொண்டு மின்சாரமாக மாற்றலாம் 99.99 சதவிகித சுத்தமான சிலிக்கான் தகடுகளின் பக்கங்களை போரான், பாஸ்பரஸ் போன்ற அசுத்திகளினால் டோப்பிங் (doping) செய்து ஒரு பக்கத்தில் வெள்ளிக் கம்பிகளை பதித்து விட்டால் சூரிய சிலிக்கான் வில்லை கள் தயாராகிவிடும். (வெள்ளி) கம்பிகள் பதித்த பக்கத்தை சூரிய ஒளி படும்படி வைத்தால் இருபக்கங்களுக்கிடையே சுமார் 0.4 வோல்ட் மின் அழுத்தம் தோன்றும். இது போன்ற ஏராளமான வில்லைகளை தொடர் அடுக்கில் வைத்தால் (series) தேவைப்படும் மின்வோல்ட்டைப் (voltage) பெறலாம். மேலும் பக்கவாட்டில் (parallel) வில்லைகளை அதிகப்படியாக வைத்தால் வேண்டும் மின்

அளவைப் (ampearage) பெறலாம். 4 சதுர மீட்டரில் பரப்பப்பட்ட வில்லைகள் நல்ல வெயில இருந்தால் 500 வாட் கொடுக்கும் சாதாரண விடுகளுக்கு தேவைப்படும் மின் அளவும் இஃதே சூரிய மின் வில்லைகள் அலலது கலங்களிலிருந்து வரும் நேரிடை மின் சாரத்தை (D C. current) அமிலமின் சேகரிப்புக்கலங்களில் (acid storage batteries) சேகரிக்கலாம். பின் அதை மாற்றிகள் (inverter) கொண்டு மாறிப்பாயும் மின்சாரமாக (alternative current) மாற்றி வீட்டுற்கு வேண்டிய உபகரணங்களை இயக்கலாம். இந்த சூரிய அடுக்குகள் (solar array) ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால் அந்த வீட்டின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து ஆக்கம் பெருகும். மின்சார வெட்டு என்ற நிலைக்கே இடமிருக்காது.

ஆனால் இன்றைய தொழில் நுட்ப நிலையில் சூரிய கலங்களை பரவலாக அமைக்க சில தடங்கல்கள் உள்ளன. முதலாவதாக இந்தியாவில் சூரிய மின்சாரம் பெற வாட்டிற்கு 150 ரூபாய் இன்று முதலீடு செய்யவேண்டும். 500 வாட்டிற்கு 75000 ரூபாய் ஆகிறது. சாதாரண இந்தியனால் இது முடியாத ஒன்ருகும். சூரிய கலகங்களின் மாற்றும் திறனும் (efficiency) 10 சதவிகிதமாக இன்று உள்ளது. சிலிக்கான் வில்லைகளைத் தயாரிக்க ஆகும் செலவும் அதிகமாக உள்ளது. சூரிய மின் கலங்களின் மாற்றும் திறனை அதிகப்படுத்தவும், சிலிக்கான் வில்லைகளின் தயாரிப்புச் செலவைக் குறைக்கவும் தீவிர ஆராய்ச்சிகள் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், ஜெர்மன். அமெரிக்கா போன்ற நாடுகளில் வேகமாக நடக்கிறது. இன்னும் 5 ஆண்டுகளில் சூரிய மின்சாரம் 10 ரூபாய்க்கு ஒருவாட் என்ற நிலைக்கு வரலாம். ஒரு வீட்டிற்கு 5000 ரூபாய் முதலீட்டில் செலவில்லாமல் மின்சாரம் பெறலாம். மின்கலங்கள் சுமாராக 20 ஆண்டுகளுக்கு உழைக்கும். இந்திய அரசாங்கம் வீடுகளுக்கும் சிறு விவசாயங்களுக்கும் சூரியகலங்களை அமைக்கவும் மானியம் கொடுக்கவும் ஆலோசித்து வருகிறது. இன்று பரிசோதனை அளவில் பல இடங்களில் ½ குதிரை வேக நீரேற்றிகளை சூரிய கலங்கள் இயக்கி வருகின்றன. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கடந்த ஓராண்டாக நீரேற்றி பழுது இல்லாமல் இயங்கி வருகிறது. வீடுகளுக்கு சூரிய மின்சாரம் கொடுப்பதின் மூலம் நம் நாட்டின் மின்சாரத்தை 20 சதவிகிதம் சேகரித்து மற்ற துறைகளுக்குத் திருப்பலாம். நாட்டின் வளம் கூடி ஆக்கம் பெருகும்.

பெரிய அளவில் சூரியமின்சாரம் கிடைக்க ஒரு திட்டம் உள்ளது. இது அடுத்த நூற்றாண்டில் சாத்தியமாகலாம். இதன்படி ஒரு ராக்கட் குடை ஒன்றை ஏந்திக் கொண்டு பூமிக்கு 36 000கி மீட்டர் உயரம் சென்று அங்கு அதை விரித்து இந்தியாவிற்குமேல் நிலையுள்ளதாகக் (stationary) செய்யும் இந்தக் குடையின் பரப்பு சுமார் 100 ச.கி மீட்டர் ஆகும் இதன் மேல் சிலிக்கான் கலங்கள் நெருக்கமாக பரப்பப்பட்டிருக்கும். அந்த உயரத்தில் இரவு கிடையாது. எந்த நேரமும் சூரியஒளி கடுமையாக கலங்கள் மேல் விழும். இங்கு உண்டாகும் மின்சாரம் ஒன்று சேகரிக்கப்பட்டு பின் மைக்ரோ அலைகளாக (microwaves) மாற்றப்பட்டு இந்திய நாட்டை நோக்கிப் பாய்ச்சப்படும். பூமியில் அமைக்கப்பட்ட வாங்கிகள் இதைப் பெற்று பின் மின்சாரமாக மாற்றி பெரிய அளவில் நாடு பூராவும் அதனைப் பெறச் செய்யும். இவ்வாறு செலவில்லாமல் மின்சாரம் கிடைத்து தொழில்கள் பெருக உதவும் வேலை வாய்ப்புகளும் அதிகமாகும்.

நேரிடை சூரிய ஆற்றல் தவிர, பல மறைமுக ஆற்றல்கள் சூரியனால் உண்டாக்கப்பட்டு நமக்கு உதவக் காத்திருக்கின்றன. நாம்தான், அவைகளை பயன்படுத்த முன்வரவேண்டும்.

அவைகளில் சில,

1 காற்று ஆற்றல்

2. அலை ஆற்றல்

3. பொங்கு அலை ஆற்றல்

4. கடல் வெப்ப ஆற்றல்

5. உயிரினவாயு ஆற்றல்

காற்று ஆற்றல்:

இந்தியாவின் பல இடங்களில் அபரிமிதமாக காற்று வீசு கிறது. இங்கெல்லாம் காற்றாடி நீரேற்றும் கருவிகள் அமைத்தால் விவசாயம் பெருகும். இதற்கான தொழில் நுட்பம் நம் நாட்டில் போதிய அளவு உள்ளது.

அலை ஆற்றல்:

அசையும் அலைகளிலிருந்து ஆற்றல் பெறலாம். பிரான்ஸில் லாரான்ஸ்ல் என்ற இடத்தில் உள்ள ஆலை, கடல் அலைகளி-லிருந்து 240 மெகாவாட் ஆற்றலைக் கொடுக்க முடியும். சராசரி யாக ஆண்டு பூராவும் 60 மெகாவாட் ஆற்றல் கிடைக்கிறதாம். கடல் அலைகளைப் பற்றி நம்நாட்டில் இன்னும் சீரான கணக் கெடுப்பு நடக்கவில்லை. இது நடந்தால் நாமும் கடல் அலைகளி-லிருந்து ஆற்றல் பெறலாம்.

பொங்கு அலை ஆற்றல்:

பொங்கி வரும் கடல் நீரை அணைகட்டி சேகரித்தால் பின் கடல் வற்றும் நேரத்தில் தேங்கிய நீரிலிருந்து ஆற்றல் பெறலாம், இது பற்றிய சோதனைகள் பிரிட்டனிலும் ஜப்பானிலும் நடை-பெறுகின்றன. நம் நாட்டிலும் கணிப்புகள் நடை பெறவேண்டும்.

கடல் வெப்ப ஆற்றல்:

சூரிய ஒளியினால் கடலின் மேற்பகுதி சூடாக கடலின் கீழ்-மட்டத்திற்கும் மேல்மட்டத்திற்கும் இடையில் சுமார் 15 லிருந்து 20°c வெப்ப நிலை வித்தியாசம் உண்டாகிறது. இதற்கிடையே அமோனியாவை பயன்படுத்தி பெரிய இயந்திரங்களை இயக்-கலாம். அவற்றிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இந்தக் கருவிகள் கடலில் மிதந்து கொண்டிருக்கும் இதை ஆங்கிலத்தில் OTEC (ocean thermal energy conversion) என்று கூறுவார்கள். லட்சத்தீவுக்கருகில் இந்தச் சூழ்நிலை சிறப்பாக உள்ளது. அங்கு இந்த கருவியை நிறுவ ஏற்பாடு நடக்கிறது.

உயிரின வாயு ஆற்றல்:

சாணம், இலைகள், மனித கழிப்புகள் போன்றவற்றை செரிக்க வைத்தால் அதிலிருந்து உயிரினவாயு கிடைக்கிறது. இதை எரி பொருளாக பயன்படுத்தலாம். சாணவாயு கலங்கள் இன்று இந்தி-யாவின் பல இடங்களில் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. மேலும் இவைகள் பிரபலமாக வேண்டும். மனிதக் கழிப்புகளை

உபயோகித்தால் ஆற்றலோடு நல்ல சுகாதார சூழ்நிலையும் பெறலாம்.

நம் நாட்டிற்கான ஆக்கம் பெருக சூரிய ஆற்றல் பலவழி-களில் உதவும். இலவசமான சுத்தமான சூரிய ஆற்றல் நமக்குக் கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். இதைச் சிறந்த முறையில் பயன்படுத்த தீவிர ஆராய்ச்சிகள் மேலும் நடைபெறுகின்றன. வெற்றி வாய்ப்பு சிறப்பாக உள்ளது. ஆற்றல் கடலாகிய சூரியனை நாமும் சிலம்பு பாடிய இளங்கோ வடிகளைப் போல்

''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்''

என்று கூறி வாழத்துவோம். நம் எதிர்காலம் சூரிய ஆற்றலிலேயே உள்ளது.

அன்டார்டிக் கண்டத்தில் அறிவியல் ஆராய்ச்சி

வருடம் பூராவும் பனி உறைந்து கிடக்கும் பெரு-நிலப்பகுதியே அன்டார்டிக் பகுதியாகும். கோவாவிலிருந்து 24 தினங்கள் கடல் பயணம் செய்து இந்திய விஞ்ஞானிகள் இந்தப்பனிக் கண்டத்தை அடைந்துள்ளனர். நாட்டின் முக்-கியத் தேவையான பெட்ரோலியம் கண்டு பிடிப்பதே இக்-குழுவினரின் குறிக்கோள். பனிப்புயலையும், கடுங்குளிரையும் தாங்குவதற்கென்றே முன்னமேயேஆயத்தமான வீடுகளையும் (pre-fabricated) அவர்களே கட்டிக் கொள்கிறார். டாக்டர் சர்மாவின் தலைமையில் இயங்கும் இக்குழுவில் இரண்டு பெண் விஞ்ஞானிகளும் உள்ளனர். அங்கு ஏராளமாக கிடைக்கும் ஒருவகை மீனைப் பக்குவம் செய்தால் நம் நாட்டின் உணவுத் தேவையினையும் ஓரளவு பூர்த்தி செய்-யலாம். கொச்சியில் உள்ள மீன் ஆராய்ச்சி நிலையம் அந்தப் பணியினைச் செய்ய உள்ளது.

மதிப்புரை

ஸிந்தி இலக்கிய வரலாறு : எல் எஜ். அஜ்வானி (தமிழாக்கம் இராம. கோபிநாதன்), சாகித்திய அக்காதெமி, இரவீந்திரபவன், புது தில்லி-110001. 1983, ரூ 25-00. 336 பக்.

சிந்து நதி பாயும் பகுதி சிந்து ஆகும். அங்கு வழங்கும் மொழி சிந்தி. அம்மொழி பேசுவோர் சிந்தியர். பிரிவினையைத் தொடர்ந்து சிந்தியர்களில் இந்துக்கள் இந்தியாவில் குடியேறினர்.

சிந்தி இலக்கிய வரலாறு பற்றிய இந்நூல் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்தியத்துணை கண்டத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள சிந்து மாநிலத்தைச் சிந்து மாநதி 360 மைல் தூரத்துக்கு இரண்டாகப் பிரிக்கிறது. ஆயிரம் ஆண்டுகட்கும் மேற்பட்ட (712-1843) முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் சிந்து நாடும் சிந்தி மக்களும் நலிந்தே போயினர். பரம்பரை பரம்பரையாக அரசியல் நோக்கு இல்லாததோடு வலிமையற்று சிந்தியர் வீழ்ச்சியுற்றனர். இந்தியாவின் மொழிகளில் சிந்தியும் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளதால் ஒளி பொருந்திய எதிர்காலம் தற்போது அதற்குண்டு.

'சிந்தி மொழியின் நேர்முதாதை 'விரச்சடா' என்ற பெயருடைய ஓர் அபப்பிரம்சப் பிராகிருதமாகும்' என்று கிரியர்சன் குறிப்பிடுகிறார். சிந்தி சமஸ்கிருதச் சார்பு என்ற கருத்தைக் கொள்வதற்குக் குறுக்கே நிற்பது அதன் தற்கால எழுத்து வடிவமாகும். எனினும் சிந்தி வளம் மிக்க மொழியாகும்.

சமயமும் மக்களிடையே வழங்கி வந்த கதைகளும் சிந்தி இலக்கியத்தின் ஊற்று. இந்து, இஸ்லாம் ஆகிய இரு சமயச் சம்பிரதாயங்களினின்றும் விலகி மகான்களையும் புண்ணிய புருஷர்களையும் வழிபடுவதே சிந்தியர்கள் சமயம். எழுத்துவடிவம் பெற்ற சிந்தி இலக்கியம் கி.பி. 1530 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் தொடங்கிற்று. 1529 ஆம் ஆண்டில் அக்பர் சிந்து நாட்டை மொகலாயப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். பாரசீக மொழியும் இலக்கியமும் சிந்தி இலக்கியத் தோற்றத்துக்குப் பெரிதும் உதவின.

ஷா அப்துல் லத்திஃப் சிந்தி இலக்கிய உலகில் ஈடு இணையற்றவர். அவருக்கு முன்னோடிகளான பெரும் எழுத்தாளர்கள் எனக் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர் மூவர்- (1) ஷா அப்துல் கரீம் (1536-1620) (2) அவருடைய கொள்ளுப்பேரன் அபு அல் ஹஸன் (பிறப்பு : 1661), (3) ஷா இனாத் அல்லது மியூன்ஷா (1613-1701); பழகி பெருகேறிய சொலலாட்சியையும் பழைய பாவினங்களைக் கையாண்டதாலும் ஷா இனாத் மரபுவழிக் கவிஞர் எனப்படுகிறார். சிந்தி மொழியில் முதன் முதலாக எழுதப்பட்டு இதுகாறும் காப்பாற்றப் பட்டுக் கிடைத்திருக்கும் நூல் அபு-அல்-ஹஸனுடைய உரைநடையாகும்.

பதினேழாவது பதினெட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஷா அப்துல் லத்தீப் சிந்தி மொழிக்கு ஆற்றிய பணி பெரிது. சிந்தி மொழிக் கவிஞருள் முதலிடம் வகிக்கின்ற இவர் ஒரு இலக்கிய மேதை.

சிந்து நாட்டில் மொகலாயர் ஆட்சி நலிந்து நசித்ததற்கும் ஆங்கிலேயர் அந்நாட்டைக் கைப்பற்றியதற்கும் இடைப்பட்ட காலம் ஒன்றே கால் நூற்றாண்டாகும். ஷாவுடன் பேசத்தகுந்த பெருமையுள்ள கவிஞர் இருவர். அவர்தாம் சச்சலும் சாமியும், இம் மும்மூர்த்திகளைக் கொண்ட பதினெட்டாம் நூற்றாண்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியும் சிந்தி இலக்கியத்தின் பொற்காலம் எனலாம். சச்சல் ஒரு சுதந்தரச் சிந்தனையாளர். அவர் ஒரு புரட்சிக் கவிஞர். அவருடைய சமயம் அன்பாகும். ''நான் ஜபமாலைகளின் மணிகளை உருட்டுவதில்லை; பிரார்த்தனை, பக்தி என்று தேடிப் போவதும் இல்லை. கோயிலுக்கு அல்லது மசூதிக்குப் போவதோ சாமியாராகி விடுவதோ எனக்கு வழிகள் அல்ல. விதியே சச்சலிடம் மிகுந்த கருணை காட்டியதால் அவனை அன்பு தன் பிடிக்குள் சிக்கெனப் பற்றிக் கொண்டு விட்டது'' என்று சச்சல் பாடுகிறார். பிற்காலத்தில் சாமி எனப் பெயர் வழங்கிய சைன்ராஜ் பச்சுமல் 107 அல்லது 120 ஆண்டுகள் வாழ்ந்தார் (1743—1850, 1730–1850) என்று சொல்லப்படுகிறது. சாமி தாமே சிறு காகிதத் துண்டுகளிலோ அல்லது மரத்துண்டுகளிலோ தம் சுலோகங்களை 'குர்முகி' எழுத்தில் எழுதி அவற்றை ஒரு ஜாடியில் சேர்த்து வைப்பாராம்.

1843 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் சிந்து நாட்டில் வெற்றி கொண்டமை சிந்தி மக்கள் வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் பெரும்

விளைவுகளை உண்டாக்கியது. பதினொரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக நிலவிய முஸ்லிம் ஆட்சி அகன்றது. பாரசீக மொழிச் செல்வாக்குக் குறைந்து சிந்தியின் செல்வாக்கு மிகுந்தது. நீதிமன்றங்களில் ஆங்கிலம் புகுந்தது. சிந்தி மொழிக்குப் புது எழுத்துருவத்தை அளித்தவர் 1851 ஆம் ஆண்டில் கமிஷனராக நியமிக்கப்பெற்ற ஸர்பார்ட்டில் ஃபிரரே (Sir Bartle Frere). அவர் அமைத்த குழுவினர் அரபு மொழியில் உள்ள வரிவடிவங்களையும் அரபு மொழியில் இல்லாத சில ஒலிகளுக்கு எழுத்துருவங்களையும் கொண்டு இப்பால் அராபிய சிந்தி (Arabic Sindhi) என்று வழங்கப்படுவதான எழுத்து முறையை உருவாக்கினர். இவ்வரிவடிவம் இந்துக்கள் முஸ்லிம்கள் ஆகிய இரு சாராருக்கும் ஏற்புடைத்தாக இருந்தது. கவிதை பழைய மரபை விட்டு பாரசீகக் கவிகளைப் பின்பற்றியது. 1907 முதல் 1947 வரையுள்ள காலப் பிரிவில் கவிதையைவிட உரைநடை இலக்கியம் ஓங்கிற்று. சிந்தி உரைநடை என்ற ஒன்று ஆங்கில ஆட்சியின் கீழ்த்தான் உருவாயிற்று. சிந்திமொழி பலதுறைகளில் முன்னேறியது.

காய்தல் உவத்தல் இன்றி எழுதப்பட்ட 'சிந்தி இலக்கிய வரலாறு' என்னும் நூல் சிறப்புடன் அமைந்துள்ளது. நாடு, மக்கள், மொழி என்ற மூன்றும் ஒன்றோடு மற்றொன்று எவ்வாறு தொடர்பு உள்ளது என்பதை இந்நூல் தெள்ளத் தெளியக் காட்டுகிறது. ஆயிரம் ஆண்டுகள் ஓர் ஆட்சி நிலவுகிறது; பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு திருப்பம் உண்டாகிறது; இந்தியத் துணைக் கண்டம் பிரிவுக்குள்ளாகி சிந்து மாநிலத்தில் சிந்தி முஸ்லிம்கள் தங்கிவிடவும் சிந்தி இந்துக்கள் இந்தியாவை நாடித் தங்கினர். 1947ஆம் ஆண்டுக்குப் பிறகு சிந்திமொழியின் இடத்தை சிந்து மாநிலத்தில் உருது பிடித்துக்கொண்டு விட்டது. இந்நூலைப் படிக்கும்போது ஆங்கில மூலத்தின் அருமையை எண்ணிப் பார்க்க இயலுகிறது. இந்நூல் மொழி வரலாற்று நூலாயினும் ஒரே மூச்சில் படிக்க நம்மை உந்துகிறது. 'கற்றனைத்தூறும் அறிவு' என்பதற்கொப்ப இவ்வரலாற்று நூலைப் படித்துப் பயன் பெற முடிகிறது. பிறமொழி நூல்களைத் தமிழில் எளிதில் புரிந்து கொள்ளும்படி மொழிபெயர்ப்பது எளிதல்ல. மொழி பெயர்ப்பாளர் இப் பணியைத் திறனுடன் ஆற்றியிருக்கிறார்.

க.சி. கமலையா

* மணியம் பிரஸ் மதுரை - 9 *